Registered as a News Paper    பக்கங்கள் 08    விலைரூபா: 6.00

நல்லூர் இன் நூலகம்
மாதகரா... ...றம்

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 05    (19 - 06 - 1992)    வெள்ளிக்கிழமை    ஓசை: 122

## க. பொ. த. (சா) பரீட்சை விண்ணப்பிப்பதில் சிரமம்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான விபரங்கள் இதுவரை கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்காமையால் வடபகுதி மாணவர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தினால் (8 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டின் பல பகுதிகளில் அகோர எறிகணை தாக்குதல்

## 10 பொது மக்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று பலத்த எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர். யாழ். நகரைச் சூழவுள்ள பகுதிகள், பண்டத்தரிப்பு, சுழிபுரம், மாதகல் ஆகிய பகுதிகள் மீது இத்தாக்குதல்கள் இடம் பெற்றன. இக் கண்மூடித்தனமான தாக்குதல்களினால் 10 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர். பல வீடுகளும், உடைமைகளும் சேதமடைந்தன.

நேற்றுகாலை 5-45 மணிமுதல் ஆறுமணிவரை பலாலி, காங்கேசன்துறை, காரைநகர், மண்டைதீவு அராலித்துறை பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்தே ஒரே நேரத்தில் பரவலாக இருபத்தைந்திற்கு மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன. இவைபண்டத்தரிப்பு, மாதகல், சுளிபுரம், அராலி, கொட்டடி, வண்ணார் பண்ணை பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன.

பண்டத்தரிப்பு பகுதியில் வீழ்ந்து வெடித்த மூன்று எறிகணைகளால் கனகலிங்கம் இந்திரா தேவி (வயது 32), நாகேஸ்வரன் சுஜீபன் (வயது 05) சுந்தரத்தை சின்னையா (வயது 70), தனேஸ்வரி (வயது 30) ஆகியோர் காயமடைந்தனர். இவர்களில் சின்னையா, தனேஸ்வரி ஆகிய இருவரும் யாழ் போதனா வைத்திய [8 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு



கப்டன் சந்தியா

நேற்று (18-06-92) மண்டைதீவிலிருந்து சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சில் [8 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு வலயத்தினுள் எறிகணை சிதறல்கள்

(நமது நிருபர்)

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சரமாரியான எறிகணைத்தாக்குதல்களால் நேற்று அதிகாலை யாழ் நகரமே அதிர்ந்தது.

மண்டைதீவுப்பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கோட்டை, கொட்டடி பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை 6 00 மணியளவில் பதினைந்திற்கு மேற்பட்ட எறிகணைகளை ஏவினர்.

இவற்றில் பல கோட்டைப் பகுதியிலும் அதன்சுற்றுப்புறங்களிலும் வீழ்ந்து வெடித்தன. சில கொட்டடி மற்றும் பாதுகாப்பு வலயத்தை அண்டிய காங்கேசன்துறை வீதியை அண் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் புலிகள் தாக்கு 2 ஊர்காவற்படை பலி

வவுனியா மாவட்டம் ஒன்பதாம்புளிற் மதகுவைத்தகுளம் பகுதியில ஊர்காவல்படை மீதும், சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு ஊர்காவல் படையினர் பலியாகினர். ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

நேற்றுக்காலை 8 05 மணியளவில் ரோந்துவந்த இராணுவத்தினர் மீதும், ஊர்காவல் படையினர் மீதும் இத்தாக்குதல் மேற்கொள்ளபபட்டது இத்தாக்குதலின்போது ஊர்காவல் படையினரிடமிருந்து 303 ரகத் துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய ரவைக்கூடு ஒன்றும் 303 ரவை ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## அம்பாறையில் ஒரு படை பலி

(கொழும்பு)

அம்பாறையில் ரோந்துக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம்மீது நேற்றுப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவத்தினர் கொல்லபபட்டார்.

இராணுவ தரப்புச் செய்திகள் இதனைத் தெரிவித்துள்ளன.

## யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு

(கொழும்பு

தீவகப்பகுதி நீங்கலாக யாழ். மாவட்டத்தில் நேற்றுக் காலை 6 மணிமுதல் ஊரடங்குச்சட்டம் அமுலபடுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்காவின்கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது

இந்த ஊரடங்குச்சட்டம் மறு அறிவிததல்வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்தது நேற்று இவ்வறிவித்தல் வெளியிடப்பட்டது.

## இரத்தம் அவசரம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியில் இரத்தம் பற்றாக்குறையாக உள்ளது. இரத்ததானம் செய்யமுன்வருவோர் உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் போதனா வைத்தியசாலை இரத்தவங்கி அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாகக் காயமடையும் பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு இரத்த தானம் செய்ய முன்வருமாறு மேலும் அவ்வதிகாரி தெரிவித்தார் (பா)

திருக்கோணமலையில்

## குடியேற்றத்தை அதிகரிக்க புதிய அதிகாரிகள் நியமனம்

திருக்கோணமலையில் குடியேற்றங்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் திருக்கோணமலை அரசாங்க அதிபர் செயலகத்தில் புதிதாக அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குடியேற்றங்களை இப்பகுதி அரசாங்க அதிபர் செயலக அதிகாரிகளே இதுவரைகாலமும் மேற்கொண்டு வந்தனர். புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் மூலம் குடியேற்றங்களை துரிதப்படுத்த அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

## 6 மாதத்திற்குள் தீர்வு பிரேமா விரும்புகிறாராம்

இனப்பிரச்சினைக்கு அடுத்த ஆறு மாதத்திற்குள் தீர்வு காண வேண்டுமென்பதில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா அக்கறை கொண்டுள்ளார் என சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் ஜனாதிபதி அக்கறை கொண்டிருப்பதால் தெரிவுக்குழுவிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் தீர்விற்கு பங்களிப்புச் செய்யுமாறும் ஆளும் கட்சியினரை அவர் கேட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்ற தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தவறாது பங்குபற்ற வேண்டும் என்று சிறிலங்கா ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்தார்

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இதனை ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

## தீவகத்தைச் சேர்ந்தோர் சொந்த இடம் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதியைச் சேர்ந்த இருபத்தெட்டு பேர் நேறறு கப்பல் மூலம் தமது இடங்களுக்குச் சென்றனர்.

நேற்றுக்காலை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் இவர்களை தமது வாகனத்தில் கொண்டு சென்று பருத்தித்துறையில் வைத்து கடற்படையினரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் இவர்களைக் கப்பல் மூலம் தீவகப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய திருவிழாவிற்காக நல்லூரைச் சேர்ந்த மூன்று பூசகர்களும் நேற்று சென்றவர்களுள் அடங்குவர் இவர்கள் அங்கு திருவிழா முடிந்ததும் மீண்டும் யாழ்நகர் திரும்புவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க) (ச) (...)

## யாழ். நகரெங்கும் சுவரொட்டிகள்

[நமது நிருபர்]

தமிழீழம் எங்கும் யுத்த மேகம் சூழ்ந்துள்ள இவ்வேளையில் சூழ்நது வரும் பகைவருக்கு புதைகுழி வெட்ட தமிழீழ மக்கள் அனைவரையும் திரண்டுவருமாறு அறைகூவல் விடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். நகரப் பகுதிகள் எங்கும் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர்.

## பதுக்குவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

அத்தியாவசிய பொருள்களுக்கு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், திட்டமிட்டு மேற்படி பொருள்களை பதுக்கிவைத்திருத்தல், இப்பொருள்களின் விலைகளை உயர்த்துதல் தண்டனைக்குரிய குற்றச் செயல்களாகும்.

இக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கெதிராக தமிழீழக் காவல்துறையினர் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வர் இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பொன்றில் [8 ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்


**ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்**

மீரா வெளியீடு, வாமதேவன் எழுதிய இந்த நாவல்... திக்கொன்றாய்ப் பறக்கும் சோதரப் பறவைகளின் சோகராகம். இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது. இதயம் சிலிர்க்கிறது. மானம்உயிர்க்கிறது. விற்பனையாகிறது. (2692)

**மாணவ மணிகளே!**

உங்கள்சீருடைகளைத் துரிதமாகவும், பளிச்சிடும் வெண்மையாகவும், சலவை செய்ய, "மில்க்வைற்" சலவைத் தூளைப் பாவியுங்கள். வெற்றுப் பக்கற்றுகளைச் சேகரித்து, சேர்ப்பித்து, அறிவு, நீதிநூல்கள், அப்பியாசப் புத்தகங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள்.

உள்ளூர் உற்பத்தியை ஆதரியுங்கள்.

(சி/4568) "மில்க்வைற்"


## எழுதுவினைஞர் தற்காலிகமானது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கும் தற்காலிக எழுவினைஞர்களின் பதவிகள் தொடர்ந்தும் தற்காலிகமானதாகவே இருக்கும் என்று வடக்கு கிழக்கு மாகாணசபைச்செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள மாவட்டங்களில் இயங்கும் அரச திணைக்களங்களில் வெற்றிடமாக இருக்கும் எழுதுவினைஞர் பதவிகளுக்கு தற்காலிகமாக நூற்றுக்கணக்கானோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின் நியமனம் மாகாண அரசினால் மேற்கொள்ளப்பட்ட தற்காலிகமான நியமனமாகும். அத்துடன் நிரந்தரமாக்கப்படுவதற்கான உத்தரவாதம் எதுவும் அற்ற நியமனம் என்பது குறிப்பிடத்தக்கது.


வவுனிக்குளம், சிவபுரம் சிவாலயம்

## மஹோற்ஸவம்

இவ்வாண்டு மஹோற்ஸவம் 27 - 06 - 92 நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு பகல் - இரவு திருவிழாக்கள் நடைபெறும்.

உற்சவகாலங்களில் தினமும் மாலை 6.00மணி தொடக்கம்
யாழ். விசேஷ மேளக்கச்சேரியும்

நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன்
வண்ணை, சந்தர்மடம்
பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா அவர்கள்
"சிவலீலை"
என்னும் விடயம் பற்றி பக்கவாத்தியங்களுடன் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.
அத்துடன் மற்றும் உள்ளூர் கலைஞர்களின் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

விசேஷ ஒலி - ஒளி அமைப்பு தினமும் உண்டு.

குறிப்பு:- பகல் உற்ஸவம், பகல் 10.00 மணி
இரவு உற்ஸவம், இரவு 09.30 மணி

கவனிப்பு :
கடைகளுக்கான இட ஒதுக்கீடு ஒழுங்கு செய்பவர்கள் முற்கூட்டியே ஆலய காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளவும்.

இவ்வண்ணம்
பரிபாலன சபை
(2644) சிவபுரம் சிவாலயம், வவுனிக்குளம்


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு : 01 – 03 – 1969



வீரச் சாவு: 19 – 06 – 1991

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்த

**2 ஆம் லெப். கண்ணையா**
**(வேலாயுதம் சிவகுமார்)**

உனது வீரமரணம்
அது முற்றுப்புள்ளியல்ல. . .
சுதந்திரம் என்னும்
விருட்சத்திற்கான
அர்ப்பணமே கண்ணையா

நீர்வேலி மத்தி
(சி/4574)
குடும்பத்தினர், நண்பர்கள்

# நினைவு கூருகின்றோம்...

## 1992-06-19

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் [மன்னார், நாச்சிக்குடா] 'அன்னை மேரி' படகில் பயணம் செய்துகொண்டிருந்த போது, சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 32 தமிழர்கள்

வசாவிளான் தோலகட்டி ஆச்சிரமத்தினுள் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

**கிளாஸ்நிக்கோ** (சாமித்தம்பி இந்திரகுமார் - கும்புறுமூலை, மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு அம்பாறை பாண்டிருப்புப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய

**லெப். சுந்தர்** (சின்னத்தம்பி சிவானந்தசிங்கம் - காரைதீவு-03, அம்பாறை)

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை, மூதூர் எல். பி.-3 பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். புவிராஜ்** (வே. கிருஷ்ணகுமார் - கங்குவேலி, மூதூர், திருக்கோணமலை)

திருநெல்வேலியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கண்ணாடி / பேபி** (சண்முகம் உதயவர்மன் 'உமாவாசம்' புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)

**சண்** (நடராசா சண்முகநாதன் - காட்டுப் புலானை, கோப்பாய் வடக்கு)

பருத்தித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட முதியவர்

1990 ஆம் ஆண்டு அம்பாறை / பொத்துவில், கொட்டுகலப் பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**குயிலி** [அம்பாறை)
**வீரமணி** (சு. ராஜேந்திரன் - கிரான், மட்டக்களப்பு)
**அசோகன்** (ஆரையம்பதி, மட்டக்களப்பு]
**காளிதாஸ்** (பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு)
**நெல்சன்** (மட்டக்களப்பு)
**வின்சன்** (ஏறாவூர், மட்டக்களப்பு)
**ஜின்னா** (லெப்பைத்தம்பி செய்னூர் - ஓட்டமாவடி. வாழைச்சேனை, மட்டக்களப்பு)

திருக்கோணமலை / மூதூர் எல். பி-3 . பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். சத்தியன்** (அருளம்பலம் பேரின்பராசா - எல். பி. -3, மூதூர், திருக்கோணமலை]

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் சேரன்** (கந்தையா சேனாதிராஜா - ஒதியமலை, மணலாறு)
**கப்டன் அந்தோனி** (ஜேக்கப் சத்தியசீலன் - எமில்நகர், மன்னார்)
**லெப். பூபதி** (குமாரசிங்கம் குமாரசங்கர் - கந்தளாய், திருக்கோணமலை)
**லெப். வக்கீல்** (செல்லையா உருத்திரதாஸ் - இல. 6/1 மீனாட்சி அம்மன்வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்)
**சுருளி** (கந்தையா நந்தபாலன் - இல. 56, குடியேற்றத்திட்டம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்]
**சதீஸ்** [உமாபதி சதீஸ்குமார் - இல. 6, குகன்வீதி, யாழ்ப்பாணம்]
**கும்பன்** [இராமச்சந்திரன் விக்னேசா - பறளாய்வீதி, சுளியுரம்]

அம்பாறையில், முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2- தமிழர்கள்.

அம்பாறை, கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது காணாமல்போன மட்டக்களப்பு மருத்துவமனை வீதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன். மற்றும். மட்டக்களப்பில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட - அதேவீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் – சுங்கன் கேணிப்பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஏழாலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதேபகுதியைச் சேர்ந்த தமிழ்ச்சிறுவன்.

1991 ஆம் ஆண்டு வவுனியா, நேரியா மோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**வினோத்** (பா. ரவீந்திரன் - 5 ஆம் குறிச்சி, ஏறாவூர், மட்டக்களப்பு)
**குமார்** (பரமன் நாதன் - 1 ஆம் வட்டாரம், கடற்கரைச்சேனை, மூதூர், திருக்கோணமலை)
**கப்டன் விஜி** (க. கனகசபாபதி - நல்லூர், பூநகரி, மன்னார்)
**லெப். சின்னச்சுதா / பாப்பி** (வைத்திலிங்கம் பரமலிங்கம் - நாச்சிமார் கோயிலடி, அராலிதெற்கு)
**2 ஆம் லெப். கண்ணையா** (வேலாயுதம் சிவகுமார் - நீர்வேலி)
**பசிலோன்** (நவரத்தினம் உதயகிருஸ்ணன் - பண்டத்தரிப்பு)
**பாரதி** (த. திவாகரன் - பலகாடு, காரைநகர்)
**ஆனந்தகுமார்** (சமிகர் சுப்பிரமணியஐயர் ஆனந்தராஜ் - மடத்தடி ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு)
**பாரி** (இராசரத்தினம் வித்தியானந்தன் - நீர்வேலி தெற்கு)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**மயூரன்** (பத்மதாஸ் மிரன் - சங்கானை மேற்கு)
**நாதன்** (சிவலிங்கம் உதயகுமார் - மருதங்கேணி, தாளையடி)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4575)

யாழ்ப்பாணம்




**வ**டமராட்சியில் உள்ள கல்லுவத்தின் செம்பாட்டு மண்ணில் இருந்து புதிய புறம் பாடப்புறப்பட்ட வீரவேங்கை இவள்.

அந்நிய ஆதிக்கம் எம்மண்ணிலே விளைத்த கோரப்பதிவுகளைக் கண்டு கொதித்தெழுந்து,

தாயக விடுதலைக்காய் தம்முயிர் ஈர்ந்த மாவீரர் வரிசையிலே இன்று இவளின் பெயரும்...

பாரதி:

இவள் குடும்பத்தில் ஒரே பிள்ளை செல்லப்பிள்ளை. தமக்கள் உயிரினும் மேலாக பெற்றோரால் நேசிக்கப்பட்டவள், போஷிக்கப்பட்டவள்.

வறுமையின் கோரப்பிடி இவளது குடும்பத்தை பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.

எந்த விடயத்திலும் ஆற்றலும், அறிவும்பெறத்தக்கவகையிலே பெற்றோரால் வளர்க்கப்பட்டாள்.

பாரதி தன் தாயை மிகவும் நேசித்தாள். அதனால் தான் அவள் தன் தாய் நாட்டையும் மிகவும் நேசித்தாள்.

பெண்களை பூவையாக எண்ணி நகையாடிய காலத்திலே...

புலியாகி களமாடி இன்று காவியமாய் தமிழீழ வரலாற்றிலே நிறைந்து நிற்கிறாள்.

1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்தி புலிகளின் போராட்டப்பாதையில் பாரதி தன்னை இணைத்துக்கொண்டாள்.

1987 ஆம் ஆண்டு மகளிர் படையணியின் 2-வது பயிற்சி முகாமுக்காக பெண் போராளிகள் தெரிவு செய்யப்பட்ட போது தானும் அதில் பயிற்சி பெற முடியவில்லையே என்று பாரதி மிகவும் மனவேதனைப் பட்டாள். எல்லோரும் பயிற்சிக்குப் போனால் தளத்திலே நின்று வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை நீங்கள்தான் அப்பொறுப்பை ஏற்றுச்செய்ய வேண்டும் என்று லெப். கேணல் திலீபன் கூறிய தற்கிணங்க பாரதி தனது மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள். மகளிர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து பெண்களை போராட்டத்துடன் இணைப்பதிலும், பெண்களது சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் வேலைகளிலும் பாரதி ஈடுபட்டாள்.

1987 ஆகஸ்ட் 10ஆம் திகதி இந்திய-தமிழீழ விடுதலைப் போரைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கம் சகல நிலைகளிலும் வளர்ச்சியைப் பெற்றுக் கொள்கிறது. வல்லரசொன்றுடன் மோதுகின்ற விடுதலைப் புலிகளின் தீரத்தையும் உலகம் கண்டு வியந்து நிற்கிறது.

குண்டு துளைக்காத நிலமென அங்குல நிலத்தையேனும் கண்டுகொள்ள முடியாத மணலாற்றுக் காட்டிலே புலிகளின் புதிய படையணிகள் வெகுவிரைவாக பயிற்சியைப் பெறுகின்றன. இக்காலகட்டத்தில் நடைபெற்ற மகளிர் பிரிவின் 4ஆவது பயிற்சி முகாமில்தான் பாரதி பயிற்சியைப் பெற்றுக்கொண்டாள்.

இவள் பயிற்சிக்குச் சென்ற அந்தநாளை நினைத்துப் பார்க்கிறேன்... இந்திய இராணுவம் இம்மண்ணிலே நிலைகொண்டிருந்த நேரம் அது. உண்பதற்கு தவிர வாயைத் திறக்கவே அஞ்சிய நேரம் அது. இந்நேரத்தில் தான் பாரதியை சந்திக்கிறேன்.

'பயிற்சிக்குப் போவோமா' என்று கேட்கிறேன். எனது கையை அன்புடன் பற்றியவள்.

'அக்கா இந்த முறையும் என்னை ஏமாற்ற மாட்டியள் தானே, கட்டாயம் அனுப்புவீர்கள் தானே' என்று கேட்கிறாள். அதே நேரம் எனது கைகளில் இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுகிறது.

ஆச்சரியத்துடன் பாரதியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன்.

'அக்கா நான் நல்ல தெளிவோடும் உறுதியோடும் இருக்கிறேன்'

இது பாரதியின் பதில். எனக்கு இன்னும் விடை பிடிபடவில்லை. இவள் ஏன் அழுகிறாள்?

இப்பொழுது, அவளது நாட்குறிப்பை பார்க்கும் பொழுது தான் அவள் அடிமனதின் ஆழத்தில் புதைந்திருந்த சோகம் தெரிகிறது.

வயிற்றுப்பாட்டிற்கே வழியின்றி வாடும் ஓர் எலும்புக் கூடு — அவளின் தாய் தன் செல்லமகள் திரும்பி வருவாள் என்று எதிர்பார்த்துக் காத்துக்



மேஜர் பாரதி

கொண்டிருக்கின்ற அந்த ஏக்கம் கண்முன்னே நிழலாடுகிறது.

அவளின் இறுதிக் கிரியைகளின் போது அழ மறந்து போய் ஒவ்வொரு போராளிகளதும் முகத்திலே தன் அருமை மகளை அடையாளங் காணத்துடிக்கின்ற அந்த தாயின் முன்னே...பேசுவதற்கு வார்த்தைகளற்றுப் போகிறோம்.

பாரதி, வானதி, கஸ்தூரி இவர்கள் மூன்றுபேரும் ஒரே பயிற்சி முகாமிலே பயிற்சி பெற்றவர்கள், நெருங்கிய தோழிகள்.

இவர்கள் கையிலே இருந்த துப்பாக்கிகளுக்கு இருந்த வேகம் இவர்கள் கரங்களிலே இருந்த பேனாவுக்கும் இருந்தது.

ஒருபுறம் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகப் போர் தொடுத்தது இவர்களது துப்பாக்கி. இன்னொரு புறத்திலே சகல ஒடுக்கு முறை சக்திகளுக்கும் எதிராக மக்களை விழிப்படையச் செய்வதில் இவர்களது பேனா பெரும் பங்காற்றியது.

இந்திய இராணுவத்தை இம்மண்ணில் இருந்து விரட்டியடித்த துப்பாக்கி வேட்டொலிகளில் எல்லாப் போராளிகளையும் போல பாரதியின் துப்பாக்கியோடு சேர்ந்து, அவளது பேனாவுக்கும் கணிசமான பங்கு இருந்தது.

1990ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் பாரதி ஆற்றிய பணிகள் குறிப்பிடக் கூடியவை.

தமிழீழ மாணவ சமுதாயம் சரியான செல்நெறி ஒன்றுக்கூடாக வளர்த்துச் செல்லப்பட வேண்டும் என்பது பாரதி மிகுந்த அக்கறை கொண்டிருந்தாள்.

இந்நேரத்தில்தான் மீண்டும் சிறிலங்கா தமிழீழ விடுதலைப் போர் ஆரம்பமாகியது. இப்போரிலே மாணவர்களை முழுமையாக பங்களிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பாரதி தானும் சண்டைபிடிக்க வேண்டும் என்று எமமுடன் சண்டையிட்டுக்கொண்டு களம் சென்றாள்.

இராணுவக் காவலரண்களை அவதானிப்பதற்காக சென்று கொண்டிருந்தவேளையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்து கொள்கிறாள்.

மீண்டும் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட பாரதி மகளிர் முன்னணியின் துணைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டார்.

பாரதியுடன் பழகுவது என்பது ஓர் வித்தியாசமான அனுபவம்.

இவள் இயற்கையை நேசிப்பவள் இயற்கையை ரசிப்பவள் இந்த இயற்கையிலே எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதையும் காணச்சகிக்காதவள்.

மாவீரர் நினைவில்லங்களில் கூட மண் பறித்திட்டு வணக்கம் செலுத்துவதை இவளால் ஏற்றுக்கொள்ளமுடிவதில்லை வேண்டுமானால் ஒவ்வொரு கல்லறைகளுக்கு அருகிலும் ஒரு நந்தவனத்தை உருவாக்குங்கள் அவை பூத்துச்சொரிந்து எம் வீரர்களை ஆராதிக்கட்டும் என்று கட்டளை இடுவாள். இவ்வாறான மிகவும் இளகிய மனதைக் கொண்ட இவளால் எம் தாயக மண் அங்குல அங்குலமாக பறிக்கப்படுவதை சகித்துக்கொண்டிருக்க முடியுமா?

விடியலைப் பிரசவிக்க வித்தான மாவீரர் வரிசையிலே எங்கள் பாரதியும்...

பாரதி,

நீ விட்டுச்சென்ற ஆயுதத்தை ஏந்திக்கொண்டு ஆயிரமாயிரமாய் விடுதலைப் பாதையிலே வீரர்கள் அணி

(6ஆம் பக்கம் பார்க்க)

# இது அரசியல் பக்கம் அல்ல

''அம்மா! தாயே!''

வாசற் படலையருகே ஆரோ குரல் கொடுப்பது குசினிக்குள் இருந்த பெண்மணிகளுக்கு தெளிவாகக்கேட்டது.

தலையில் சிறிது நரைபடர்ந்திருக்க, டீங்கான உடையுடன் கட்டளையிடும் அதிகாரி ஒருவன்ரைப்போலதிருவலைப் பலகையில் சப்பாணி கட்டி அமர்ந்திருந்த அம்மணி நிமிர்ந்து பார்த்தாள்.

கையில் சில 'கரட்' துண்டுகளை வைத்துக்கொண்டு ஒரு தட்டில் அதனைச் சீவிக் கொண்டிருந்த மற்றப்பெண்மணியோ முன்னவளின் குறிப்பறிந்து கொண்டது போல தட்டைக்கீழே வைத்து விட்டு எழுந்தாள் உள்ளங்கையிலும், கையின் மேற்புறந்திலும் ஒட்டிக்கிடந்த 'கரட்' சீவல் துாளைத் தட்டி விட்டுக் கொண்டாள் ஆடைகளையும் ஒருமுறை சரிசெய்து கொண்டவளாக நடந்து சென்று வீட்டின் முன் பக்கக் கதவைத் திறந்தாள்

"அம்மா தாயே!! பசிக்குதம்மா! சாப்பிட ஏதும்.'. விழிகள் கெஞ்ச உதடுகள் அசைத்து குரல் கொடுத்தது ஒரு மெல்லிய உருவம்.

''என்னப்பா... பிச்சையா இங்கேஇன்னும்ஒண்டும்சமைக்கேல்ல போ....போ..:

அவள் விரட்டினாள்

''அம்மா...இரண்டு நாளா ஒண்டும்சாப்பிடேல்ல....''

''அதுதான் சொல்றனில்ல.. இங்க ஒண்டுமில்லப்போ''

என்ன செய்வான் பாவம் திரும்பிப்போக அடியெடுத்து வைத்தான்.

படலையை சாத்திப் போட்டு போ'' வாசற் கதவுக்கு சமீபமாக நின்ற அவள் உரத்துக் குரல் கொடுத்தாள் பதிலேதும் கூறியதாகக் கேட்கவில்லை ஆனால் படலையை இழுத்து அவன் கொழுக்கியைப்போட்ட விதம் அவனது கோபத்தைப்புலப்படுத்தியது.

போய்விட்டான் நிம்மதிப் பெருமூச்சை இழுத்து விட்டவளாக வாசற் கதவைச் சாத்திப் பூட்டிவிட்டு திரும்பினாள்.

'.உது ஆர் பிள்ளை.... வந்தது...கேட்டபடி நின்றாள் அந்த வயதான அம்மணி.

'அது... ஆரோ பிச்சை கேட்டு வந்தவை.'

'ஆமோ என்ன சொல்லி அனுப்பினனீ'

'இஞ்ச ஒண்டுமில்லயெண்டு சொல்லி அனுப்பிப்போட்டன் மாமி' என்றவள் 'கெட்டிக்காரி' என்ற பாராட்டுக் கிடைக்கும் என்று தான் எதிர் பார்த்தாள்.

ஆனால் மறுதலையாக 'கதவைத்திற... அவனைக் கூப்பிடு' மாமி இரைந்தாள் திடுக்கிட்டவளாக மாமி ஏதோ குடுக்கப்போறவாக்கும். போற வழிக்காவது புண்ணியமாய் போகட்டுமன் என நினைத்தவளாக 'அவுக்கெனக் கதவைத்திறந்து படலை வரை ஓடிச்சென்று இரு கைகளையும் சேர்த்து தட்டினாள். சிறிது தூரம் சென்றுவிட்டிருந்த அந்தப் 'பிச்சை' திரும்பிப் பார்த்தான் வரும்படி சைகை காட்டினாள். அவனும் திரும்பி நடந்தான். உள்ளே திரும்பி... 'மாமி அந்தான் வருது' எனக் கூறியபடி வீட்டுக்குள் விரைந்தாள்.

வாசல்வரை சென்ற மாமி... அவனது வருகையை வழிமேல் விழிவைத்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

'அம்மா... நீதான் மகராசியாய் இருக்க வேணும்' என்று படலையடியில்குரல் பலமாகக் கேட்டது.

'என்னப்பா வேணும்' மாமியின் குரலில் ஒரு வித அதட்டல்'

'அம்மா பசிக்குதம்மா' என்று ஈனக்குரல் மீண்டும் ஒலித்தது.

'உவன் இப்ப உனக்கு என்ன சொன்னவன்' கடூரமாய் ஒலித்தது மாமியின் குரல்.

'இன்னும் சமையல் முடியேல்லை எண்டு சொன்னவ' பலவீனமாக இழுத்ததை இடை மறித்தாள் மாமி.

'அதெப்படி அவ சொல்லுறது. அவ இந்த வீட்டு மருமோள். நான் தான்மாமி நான் சொல்லுறன் பிச்சையில்லைப் போ' என்று முழங்கிவிட்டு வாசற் கதவை இறுக்கிச்சாத்தினாள் அம்மணி.

★ ★ ★

இது மாமியார் – மருமகள் தகராறு பற்றி விளக்க தமிழ் மக்களிடையே பல காலமாக நிலவிவரும் ஒரு செவி வழிக்கதை. பாராளுமன்றத் தெரிவுக்குழு தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்மொழியும் யோசனைகளை அமுல்படுத்துவேன் என்றும் இதனால் பதவி பறிபோனாலும் கவலைப்படப் போவதில்லை என்றும் வீராப்புப்பேசி வந்த சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கொழும்பில் இருக்கும் தமிழ்க்குழுக்களை அழைத்துப் பேசியது நினைவில் இருக்கக் கூடும். தேசிய இனப்பிரச்சினையிற்கான இறுதித் தீர்வின் ஒரு அங்கமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டதாக வானொலியில் செய்தி அலைகள் வந்த போது இந்தக் கதை தான் ஏனோ ஞாபகத்திற்குவந்தது.

பௌத்தபிக்குகளும், எதிர்க் கட்சிகளும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த போதும், தமிழர் தாயகம் என ஒன்று இல்லை எனக் கூறிய போதும், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா, இனவாதத்தை கிளறிவிட்டு அரசியல் லாபம்தேட முற்படுவதாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டியதுடன் இன ஐக்கியத்தின் அவசியம் பற்றியும் வலியுறுத்திக் குரல்கொடுத்தார். தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்போகிறேன் என்று வீறார்ந்த முழக்கம் செய்தார். அதற்காகப் பதவி பறிபோனாலும் கவலைப் படப்போவதில்லை என்று உரத்த குரலில் கூறியிருந்தார்.

இந்தப் பகட்டான வார்த்தைகளை உண்மையென நம்பியோ என்னவோ 'தமிழ்க் குழுக்கள்' எனப் பெயர் சூட்டிக் கொண்டவர்கள். பிரேமதாசாவை வாயார வாழ்த்திக் கொண்டு அவர் காலில் மண்டியிட்டனர். அப்போதுதான் 'பிச்சையும் இல்லைப்போ' என்பது போல பிரேமதாசாவும் சிங்களபௌத்த தேசத்திற்கு மட்டுமே தான் ஜனாதிபதி என்பதை நிரூபித்துக் கொண்டு விட்டார்.

இதிலிருந்து பெறவேண்டிய படிப்பினை ஒன்றுள்ளது. அதாவது சமமான பலத்துடன் பேச்சுவார்த்தை நடந்தால் தான் இணக்கம் ஏற்பட வழி கிடைக்கும். இல்லையேல் பேச்சுவார்த்தை என்பது மண்டியிடுவதாக மட்டுமே இருக்கும். அதிலும் பலவீனமான நிலையில்இருப்பவன் கண்ணீர் விடுவதால் மட்டும் நீதி நிலை நாட்டப்பட்டுவிடமாட்டாது

-இனியவன்-

சிறுகதை

# பாலம்

## தாமரைச்செல்வி

உயரமான மரங்களும் அடர்ந்த பற்றைகளுமாய் இருந்த அந்த பிரதேசத்தை பிரதான வீதி ஊடறுத்து சென்றுகொண்டிருந்தது.

நிலத்திலிருந்து மிகவும் உயரத்தில் பிரதான வீதியின் ஒரு சிறு வளைவில் அந்தப் பெரிய பாலம் அமைந்திருந்தது.

இரண்டுலொறிகள் தாராளமாய் ஒன்றை ஒன்று விலத்திச் செல்லும் அளவுக்கு நல்ல அகலமான பாலம்.

இரண்டு பக்கங்களும் நீளமான சீமெந்துக் கட்டுடன் இடையே கனமான இரும்புக் கம்பிகளை இணைத்து கிட்டத்தட்ட இருபது அடி நீளத்துக்கு கட்டப்பட்ட பாலம்.

அந்தப் பாலத்தின் ஒரு பக்க சீமெந்துக் கட்டில் அவன் அமர்ந்திருக்கிறான். இரவு நேரத்து அமைதியைக் கிழித்துக் கொண்டு சிலவண்டுகளின் கிர்... என்ற சத்தம்.

காற்றுக் கூட வீசவில்லை அமாவாசை முடிந்து இன்றைக்கு ஐந்தாம் நாள்.

மெல்லிய பிறை நிலவு வானத்தில் நீந்தியது. அந்த நிலவின் மெல்லிய ஒளியில் எதிரே எல்லாம் மங்கலாக இருள் வடிவமாய் தெரிகிறது.

பாலத்தில் இருந்து கொண்டு அவன் சுற்றும் முற்றும் பார்க்கிறான். தெருவின் இருபக்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பற்றைகளும் உயரமான மரங்களும் நடுவே பாலம் மிகவும் உயரத்தில்... பாலத்துக்கு கீழே அகலமான வாய்க்கால்,

மழைக் காலங்களில் மாரி வெள்ள தண்ணீர் இதிலே ஓடும் இப்போது... இந்த வைகாசி வெய்யில் காலத்தில் வாய்க்கால் காய்ந்து வரண்டு போய் இருந்தது. கரையோரம் புதர் மண்டிப் போயிருந்தது. மண்ணின் நிறமே மாறி சொரசொரப்பாய் போய்விட்டது. அந்த சூழ்நிலையைப் பார்க்க அவன் மனதில்துயரம் பொங்குகிறது என்னமாய் இருந்த பிரதேசம்...

அவனுக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்தே இந்தபாலத்தோடும் இந்த வாய்க்காலோடும் இந்த பாலைமரங்களோடும் உறவாடி வந்திருக்கிறான்.

அதோ .. பாலத்தின் இடது பக்கமாகப் பிரதான தெருவிலிருந்து ஒரு ஒற்றையடிப் பாதை போகிறதே...

அந்தப் பாதையால் போனால் கூப்பிடு தூரத்தில் இருக்கிறது அவனது கிராமம் அவன் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த கிராமம்.

முப்பது குடிமனை வரும். விவசாயம் செய்து மாடுகள் வளர்த்துத்தான் சீவியம்.

சிலவேளைகளில் றால் சீசனில் தட்டுவங்கொட்டிக்கு றால் பிடிக்கப் போவார்கள். கொஞ்சம் இளம் ஆட்கள் சுண்டிக்குளம் போய் மீன் வியாபாரம் செய்வார்கள்.

கிராமத்தைச் சுற்றி பாலை மரங்கள். இந்த வைகாசி, ஆனியில் பாலைப் பழங்கள் பழுக்கும். கிராமத்தவர்களுக்கு இந்த இரண்டு மாதங்களிலும் நல்ல உழைப்பு.

கிராமத் தொடக்கத்தில் தெருவைப் பார்த்தபடி இருக்கும் அம்மன் கோவிலில் ஏற்றப்படும் விளக்கின் வெளிச்சம் இங்கிருந்து பார்க்கும்போதே தெளிவாய்த் தெரியும்.

கோவிலுக்குப் பின்னால் உள்ள கிராமத்தவரின் குடிசைகளின் கூரைகள் மரங்களுக்கிடையே தெரியும்.

இப்போது அம்மன்கோவில் இல்லை. கிராமத்தில் ஒரு குடிசையும் இல்லை. எந்த ஆட்களும் இல்லை.

அவன் நீண்ட பெருமூச்சுடன் எதிரே பார்க்கிறான். கருமையாய் இருட்டுக்குள் பற்றைகளும், மரங்களும் ஒவ்வொரு வடிவங்களாய்த் தெரிகிறது

மூத்திய காலங்களின் நினைவுகள் 'எதுக்குள் வந்து நிரம்பிக் கொள்கின்றன. யாழ். நகரை இலங்கையின் தென் பகுதிகளுடன் இணைக்கும் ஒரே வீதியான கண்டி வீதி இது

அதனால் அப்போதெல்லாம் பஸ்களும், லொறிகளும், கார்களுமாய் ஒரே வாகனங்கள் இரவு பகலாய் போய்வந்தபடி இருக்கும்

சிறுவனாய் இருந்த காலத்தில் தன் தோழர்களுடன் இந்தப் பாலத்தில் அமர்ந்து கொண்டு வாகனங்களை வேடிக்கை பார்ப்பான்.

மாரி காலங்களில் எந்த நேரம் என்றில்லாமல் இந்த வாய்க்காலே கதி என்று கிடப்பார்கள். இந்தப் பாலத்தின்மீது ஏறி நின்று கொண்டு தொபீர் என்று வாய்க்காலில் குதித்து நீந்துவார்கள்.

ஒருநாள் அவன், சிவபாலன் மகேந்திரன், துரைராசா, சோணேஸ் எல்லோரும் பாலத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தபோது அவன் பாலத்தின் சீமெந்துக் கட்டில் படுத்து நித்திரையாகி விட்டான்.

அவனைச் சிவபாலன் விளையாட்டாய் அங்கிருந்து பிடித்துக் கீழே வாய்க்காலுக்குள் தள்ளி விட்டு விட்டான்.

அவன் ஒரு கிழமையாய்ச் சிவபாலனுடன் கதைக்கவில்லை. பிறகு இரண்டு பம்பரம், பன்னிரண்டு போளை, ஒரு எட்டுமூலைப்பட்டம் என்று சிவபாலன் கொடுத்துக் கெஞ்சிய பிறகுதான் அவன் சமாதானமாகினான்.

சிறிது வளர்ந்த பிறகு அம்மன் கோவில் பக்கத்தில் உள்ள சிறிய வெட்டையில் வேறு இளைஞர்கள் கரப்பந்தாட்டம் அடிக்கும்போது இவர்கள் பாலத்தில் அமர்ந்து கொண்டு வாகனங்களை வேடிக்கை பார்ப்பார்கள்

ரவுணுவுக்கு போய்ப் பார்த்து வட்டு வந்த படங்களை பற்றி, நடிக நடிகைகளைப் பற்றி வாய் ஓயாமல் கதைப்பார்கள்.

சிரித்திரன், மல்லிகை, சுடர். பேசும்படம் என்று அகப்படுகிற புத்தகங்களைப புரட்டுவார்கள்.

மகுடியின் பதில்கள் படிப்பதற்காகவே சிவபாலன் தொடர்ந்து சிரித்திரன் வாங்குவான்.

நிலவுக் காலங்களில் இரவு பத்து மணிவரை பாலத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள். அந்த உயரத்தில் நின்று நிலவு வெளிச்சத்தில் சுற்றுப் புறத்தைப் பார்த்தால் மலைநாட்டில் நிற்பதுபோல ஒரு உணர்வு வரும்.

அந்த வீதிக்குச் சிறிது தூரத்தில் வீதியோடு சமனாக நீளத்திற்கு ரயில் பாதை

அதற்கும் வாய்க்காலைக் குறுக்கறுத்து இரும்புக் கேர்டரினால் பாலம் போடப்பட்டிருந்தது. இரவு மெயில் வண்டி போவதை இந்தப் பாலத்திலிருந்து கொண்டு ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

மெயில் வண்டியும் போய் கடைசிபஸ்ஸும் .. கொழும்பு பஸ்ஸும் போன பிறகுதான் வீடு திரும்புவார்கள்.

'இருட்டுக்க எங்கயடா திரியிறாய். பாம்பு. பூச்சி கடிச்சா என்ன செய்யிறது. அங்க ஆரை வய் பார்த்துக் கொண்டு நிக்கிறனீங்கள் பாலத்திலதான்ரா உங்களுக்கு உத்தியோகம்.''

என்று அம்மாவிடம் அடிக்கடி திட்டு வங்குவதிலும் ஒரு சந்தோஷம் இருந்தது.

'அப்பிடி பத்து மணிவரைக்கும் இவங்கள் என்னத்தைத் தான் கதைப்பாங்களோ .'' அம்மாவின் அதிசயிப்பு அவனுக்குள் சிரிப்பைத் தோற்றுவிக்கும்.

சிவபாலன் எப்போதும் பகிடியாய்க் கதைப்பான். அவனுடைய பேச்சுக்களைக் கேட்டால் மனம் விட்டுச் சிரிக்கலாம்.

அவனுடைய மனம் ஒரு தடவை குலுங்கி நிமிர்கிறது.

அந்த இரவில் கூடக் காற்றின் தன்மை வெம்மையாய் இருக்கிறது பிடரிக்குள் வேர்க்கிறது.

அந்த சிவபாலன் இப்போது இந்த உலகத்தில் இல்லை. பின்னாளில் ஏற்பட்ட மாற்றங்களில் அவனும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி மாங்குளம் முகாம் தகர்ப்பில் தன் உயிரை அர்ப்பணித்து விட்டான். துரைராசா இப்போது கிளிநொச்சிக்கும் கொழும்புக்குமிடையே லொறி ஓடுகிறான். ஒரு தடவை பரந்தனில் அவனைக் கண்டபோது சொன்னான்.

கிராமத்தவர் வீடுவாசலை விட்டு அகதியாய் ஓடிப்போக மகேந்திரனும் அவர்களுடன் போய்விட்டான் அவனைச் சந்தித்து ஒரு வருடமாகிறது.

சோணேஸ்சுண்டிக்குளத்தில் மீன் வியாபாரம் செய்கிறான். எல்லோருமே ஒவ்வொரு திக்கில் சிதறிப் போனார்கள்.

ஆனால் அவர்களும் அவனைப் போலவே இந்தப் பாலத்தையும், வாய்க்காலையும், கிராமத்து வாழ்க்கையையும் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்

முன்பெல்லாம் ஆள் நடமாட்டம் உள்ள இந்த இடங்கள் இப்போது வெறிச்சிட்டுப் போய் விட்டது.

கிராமத்தில் இப்போது யாரும் இல்லை. அனைவரும் கிராமத்தை விட்டு வெளியேறி இரண்டு வருடங்களாகப் போகிறது.

தொண்ணூறாம் ஆண்டு ஜூனுக்குப் பிறகு வந்த சண்டையில் இராணுவம் வந்து கிராமத்தையே எரித்து விட்டது.

அம்மன் கோவில் கூட தப்பவில்லை. கிராமத்துக்குப் போகும் ஒற்றையடிப் பாதையில் இப்போது முள்ளுப் பரவியிருந்தது.

எதிரே ரயில் ரோடு கூட கோலம் மாறிப்போய் இருந்தது சிலிப்பர் கட்டைகளும் தண்டவாளங்களும் பெயர்த்து எடுக்கப்பட்ட நிலையில் பாதை சிதைந்து போய் கிடந்தது. ரயில் பாலத்தைத்தவிர மற்ற இடங்கள் மண் மூடிப் பற்றைகளாய் கிடந்தன.

மனதுக்குள் ஆற்றாமை பொங்குகிறது.

பிறந்து வளர்ந்து எத்தனையோ வருஷங்களாய் வாழ்கின்ற வீடு வாசலை விட்டு அகதியாய் இன்னொரு இடத்துக்கு ஓடுவதென்றால்...?

இதோ பாலை மரங்களில் இலை தெரியாமல் பாலைப் பழங்கள் பழுத்திருக்கிறது. யாருக்கும் பிரயோசனமில்லாமல் போகப் போவதை நினைக்க வயிறு எரிகிறது

இந்த நிலை ஏன் வந்தது ?

எங்கள் வீடுகளில் வாழ முடியாத சூழ்நிலை எப்படி வந்தது?

அவன் கவலையுடன் கண்களை இடுக்கிக் கொண்டு தூரப்பார்க்கிறான்.

மிகவும் தொலைவில் வீதியின் பக்கத்தில் சின்ன வெளிச்சங்கள்... ஒரு கனமான வாகனத்தின் தேய்வான இரைச்சல் ..

இங்கிருந்து இரண்டு மைல் தூரத்திலிருக்கும் பிரதான முகாமிலிருந்து இராணுவம் இந்தப் பக்கமாய் சிறிது முன்னேறியிருக்கிறது.

முன்பு இந்த இடத்துக்கு இராணுவம் வந்தால் நாலைந்து நாட்கள் நின்று விட்டு திரும்பி விடுவார்கள். இந்த தடவை வந்து ஒரு வாரமாய் நிற்கிறார்கள்.

அவன் பார்வையை மீட்டு பாலத்தின் இருபக்கங்களையும் பார்க்கிறான்.

சிறிது தூரத்தில் வாய்க்கால் கரை ஓரங்களில் அடர்ந்த மரங்களின் கீழே மண் மூட்டைகளை அடுக்கி காப்பரண்களின் பின்னால் போராளிகள்...

இருள் கண்களுக்குப் பழகி விட்டதனால் அவர்களின் உருவங்கள் அசைவது லேசாய் தெரிகிறது.

மீண்டும் தூரத்தில் வாகன இரைச்சல் .

அவன் பார்வையை கூர்மையாக்குகிறான் .

ஒரு வாரமாய் அந்த முகாமில ஏதோ ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

வாகனங்கள் இதுவரை இந்த முகாமுக்கு வந்ததில்லை.

இப்போது மூன்று நாட்களாக வாகன இரைச்சல் கேட்கிறது.

அவன் யோசனையுடன் தலைமயிரை கோதிக் கொள்கிறான்.

தொண்டைக் குழிக்குள் எதுவோ அடைப்பது போலிருக்கிறது.

அப்போது பாலத்தை நோக்கி ஒரு உருவம் மெதுவாய் நடந்து வருவது தெரிகிறது.

கிட்ட வந்ததும் 'நகுலன்?' என்றான்.

'அண்ணை !'

நகுலன் ஒருகையில் ஐந்து லீற்றர் கானுடனும் மறுகையில் சிறு பெட்டியுடனும் நிற்கிறான்.

'எல்லாம் சரியே...' மெல்லிய குரலில் கேட்கிறான்.

'ஓம் அண்ணை, சென்ரிப் பெடியளுக்கும்சொல்லியாச்சு'

'சரி'

சிறுவயதிலிருந்து தன் உணர்வுகளோடு ஒன்றிப் போயிருந்த அந்தப் பாலத்தையும் வாய்க்காலையும் அவன் ஒருநிமிடம் ஆசையோடு பார்க்கிறான்.

அடுத்த நிமிடம் தூர முகாமை ஒரு தடவை வெறித்து விட்டு பாலத்துச்சுவரில் இருந்த தனது துப்பாக்கியை எடுத்துக்கொள்கிறான்.

'டென்டோர்ச் எண்டாலும் அடிக்காதை நகுலன் இவடத்தின்ர ஒவ்வொரு அங்குலமும் எனக்குத் தெரியும். நீ என்னோடயே வா'

பாலத்தின் சரிவில் புதர்கள் நடுவே சப்பாத்துக் கால்களை மெதுவாகப் பதித்து இறங்குகிறான்.

நகுலனிடமிருந்து வெடி மருந்துகள் நிரப்பப்பட்ட சக்கைக் கானை வாங்கி பாலத்தின் அடிப்பரப்பில் கவனமாக வைக்கிறான். அதில் இணைத்த வயர்களை இழுத்துக் கொண்டு பற்றைகளுக்கூடாக

[6ஆம் பக்கம் பார்க்க]

## நாங்கள் பனைமரங்கள்

நாங்கள்.
பனை மரங்கள்.

யுகங்களின்,
பரிதவிப்பில்
பிரசவித்துக் கொண்ட
வறண்ட பூமியின்
வாரிசுகள்

பிரபஞ்சத்தில்
புதிய பெயரொன்றைப்
பிரேரிப்பதற்காய்
வறுமை வயல்களில்
வீழ்ந்து முளைத்த
விருட்சங்கள்

துயர்தோய்ந்த
இரவுகளின்
இருண்மையை விரட்ட
விழுதுகளையும் கிளைகளையும்
விட்டுப் பிரிந்த
நெருப்பின்
குழந்தைகள்

நாங்கள்
கனவுகளின் மிதப்பில்
தடுமாறி
காற்றின் திசையில்
தலைசாயும்
நாணல்களல்ல

நிமிர்ந்து நிற்கின்ற
நெட்டைப் பனைமரங்கள்

கொட்டும் மழை
குமுறும் கடலலை
சுட்டெரிக்கும்
சூரியப் பார்வை
திசைகள் திடுக்கிடும்
மின்னல் இடிமுழக்கும்
மேகக் கதிர்வீச்சு
என்ன செய்யும்
எங்களை

எங்கள் வீழ்ச்சி
மரணமல்ல
விளைந்த பயிரின்
அறுவடை

நாங்கள்
பனை மரங்கள்
நிமிர்ந்து நிற்கின்ற
நெட்டைப் பனைமரங்கள்

நன்றி: சுதந்திர தாகம்

# ஜெயலலிதாவின் ராஜ்ஜியம்

நிலாந்தன்

"எம் ஜி ஆர். இன்றுஉயிருடனிருந்திருந்தால தடாசட்டத்தன் கீழ் கைதுசெய்யப்பட்ட முதல் நபராக அவர் இருந்திருப்பார்." இவ்வாறு கூறியுள்ளார்பண்ருட்டிராமச்சந்திரன். இப்போது பாட்டாளி மக்கள் கட்சியிலிருப்பவரும் முன்பு எம் ஜி ஆரின் நம்பிக்கைக்குரிய அமைச்சரவை நண்பணுமாயிருந்த ராமச்சந்திரன் இந்தியா-இலங்கை உடன்படிக்கை உருவான காலங்களில் எம் ஜி. ஆருக்கும் புலிகளிற்கும் இடையிலான சந்திப்புக்களின் போது அநேகமாக உடனிருந்தவர் என்று சொல்லப்படுகின்றது. உடன்படிக்கையைப் பொறுத்தவரை அவர் புதுடில்லிக்குச் சார்பாக நடந்து கொண்டதாகப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன புலிகளிற்கும் இந்தியப் படைக்கும் இடையிலான யுத்தம் ஆரம்பமானதன் பின்னரும். எம். ஜி ஆர் புலிகளிற்கு நிதி உதவிகள் செய்தாரென்று சொல்லப்படுகின்றது. நிச்சயமாக இது பண்ருட்டி ராமச்சந்திரனிற்கும் தெரியாமலிருந்திருக்க முடியாது.

ஆனால், எம். ஜி. ஆரின் தொடர்ச்சி என வாணிகப்படுப செல்வி ஜெயலலிதா இந்த விசயத்தில் நேர் மாறானவராகக் காட்சிதருகிறார் "புலிகள் அமைப்பும் பயங்கரவாத அமைப்பு என்று ஆகிவிட்டது. பயங்கரவாத அமைப்பு எதையும் எப்படி நடத்துவோமோ அப்படியே இந்த அபாயத்தையும் கையாளுவோம்" என்று இந்தியா டுடேக்கு (செப்டெம்பர் 6-20-1991) வழங்கியபேட்டியில் அவர் கூறினார். இந்தியாவில் உள்ள புலிகளுக்கு எதிரான விமர்சகர்களும் இந்த விசயத்தில் ஜெயலலிதாவை மிகப் பொருத்தமான முதல்வர் என்று கருதுகிறார்கள். துக்ளக் ஆசிரியர் சோ இரு மாதங்களிற்கு முன்பு சண்டே மெயில பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில, மகாமகம் சம்பவம் தொடர்பாக ஜெயலலிதா ஏன் ராஜினாமாச் செய்யக்கூடாது என்பதற்குப் பின் வருமாறு காரணம் கூறுகிறார் 'விடுதலைப் புலிகளின் பிரச்சினை காரணமாகத்தான். அடுத்து வேறு ஒரு அரசு வந்தால் விடுதலைப்புலிகள் விசயத்தில் அந்த அரசின் அணுகுமுறை எப்படிஇருக்கும் என்பதுஎனக்குத் தெரியாது ஆனால் இவ் விசயத்தில் முதல்வரின் அணுகுமுறை மிகவும் சரியாக இருக்கிறது இதுதான் ராஜினாமாக் கோராததிற்குக் காரணம்"

புலிகளுக்கு எதிராக மட்டும் அல்ல, மாநிலம் சம்மந்தப்பட்டவேறு விவகாரங்களிலும் ஜெயலலிதாவின் அரசியல் முன்னைய முதல்வர்களை ஒத்ததாக இல்லை. அது ஒரு வகை பரபரப்பு அரசியல்சாகசஉணர்வுடன் மிகுந்தது அமைதியுறாத ஜெயலலிதாவின் உளவியலுக்கூடாகவே அதைப்புரிந்து கொள்ள முடியும். ஜெயலலிதாவின் உளவியல் எத்தகையது?

ஜெயலலிதா தனது தனிமை குறித்து சலிப்புறுகிறாரா அல்லது திருப்திப்படுகிறாரா என்பது தெரியவில்லை. ஆனால் அரசியலைப் பொறுத்தவரை யாரிலும் தங்கியிராமல், எந்த ஆபத்துக்குறித்தும் அச்சப்படாமல் துணிச்சலான அதிரடி முடிவுகளை எடுப்பதற்கு அவரது தனிமை ஒரு பலமாக உள்ளது அதேசமயம் அவரது தனிமை அவருடைய இளமைக்கால சினிமா வாழ்வின் தொடர்ச்சியாகவே சொல்லப்படுகின்றது. எனவே அது எப்பொழுதும் அவதூறுக்குள்ளாகக் கூடியதாக உள்ளது தன்னுடைய இளமைக்கால திரையுலக வாழ்வு குறித்து தன்மீது விழுந்துள்ள படிமங்களைக் களைய அவர் மேற்கொள்ளும் எத்தனங்களே அவருடைய அரசியலைத் தீர்மானிக்கின்றன. அவரிடம் காணப்படும் பரபரப்பு, சாகச உணர்வு, அலட்சியமான பார்வை எல்லாமே அவரது கொந்தளிப்பான உளவியலின் வெளிப்பாடுகள் தான் அவரே ஒருபேட்டியில் (இந்தியா டுடே செப்ரெம்பர் 6-20-1991) கூறுகிறார் "நான்உட்படுத்தப்பட்ட அளவுக்கு பொதுவாழ்வில் இருக்கிற வேறு எந்தப் பெண்ணும் தூற்றலுக்கும் சொல்லம்புத் தாக்குதலுக்கும் ஆளானதில்லை அதுவெறும்விமர்சனமல்ல நான் அவதூறுக்கு உள்ளாக்கப்பட்டேன் இழிவுபடுத்தப் பட்டேன்......"

இந்த இடத்தில் ஜெயலலிதா இரக்கத்துக்குரியவராகவேகாட்சிதருகிறார் ஆனால் தன்னைச்சுற்றி எழுப்பப் பட்டுள்ள இழிவான படிமங்களை உடைத்தெறிந்துதன்னை நிரூபிக்க அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் சினிமாத்தனமானவைகளாக அமைந்துவிட்டது. துரதிர்ஷ்டவசமானது.

அவர் புகழப்படுவதை விரும்புகிறார் தனது மந்திரிகள் தன்னைக் காலில் விழுந்து வணங்குவதை அவர் தடுத்து நிறுத்துவதில்லை அவர்கள் தம்கள் தேகங்களில் ஜெயலலிதாவின் பெயரால் பச்சை குத்திக் கொள்கிறார்கள் (பச்சை குத்துவது) ஒருவகையான தொல்குடி இயல்பு என்று சொல்லப்படுகிறது. மெய்யாகவே தமிழக அரசியல் ஒரு தொல்குடி அரசியலாகத்தான் உள்ளது-சட்டமன்றத்தில் மல்யுத்தம் புரிவது எதிர்க்கட்சித் தலைவியைத் துகிலுரிவது போன்றவை சில உதாரணங்கள்) "எம் ஜி ஆர். வடிவம் ஜெயலலிதா அவரை நன்கு உற்றுப் பார்த்தால் எம் ஜி ஆரும் தெரியும்" என்று சொல்கிறார் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா இவ்வாறான மந்திரிகளின் விசுவாசம் பற்றி என். சுப்பிரமணியன் பின்வருமாறு எழுதுகின்றார்(புரொன்ட்லைன், மே 22. 1992) "கல்வி மந்திரி புதிதாகக் கட்டப்படும் பாடசாலைகளிற்கு ஜெயலலிதாவின் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று சொன்னால், விவசாய மந்திரி புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நெல்லினத்திற்கு 'ஜெயா-ஜெயா.92' என்று பெயரிடுகிறார் வீடமைப்பு மந்திரியோ எல்லா மாவட்டங்களிலும் ஜெயா நகர் நிர்மாணிக்கப்படும் என்கிறார். அதோடு அந்தநகரங்களில் உருவாக்கப்படும் விளையாட்டரங்குகளிற்கும் திருமண மண்டபங்களிற்கும் ஜெயலலிதாவின் பெயரே சூட்டப்படுமாம். இது விசயத்தில் இசையமைப்பாளர்களும், திரைப்படத் தயாரிப்பாளர்களும பின்நிற்கவில்லை வயலின் வித்துவான் குன்னக்குடி வைத்தியநாதன் ஒருபுதிய ராகத்தைக் கண்டுபிடித்து அதற்கு ஜெயலலிதாவின் பெயரைச் சூட்டியுள்ளார். திரைப்படத் தயாரிப்பாளர் ஜி வெங்கடேஸ்வரன், கிருஸ்ண ஜெயந்தி, காந்தி ஜெயந்தி போன்றன கொண்டாடப்படுவது போல ஜெயா ஜெயந்தி கொண்டாடப்பட வேண்டும் என்று கூறுகிறார்."

இவ்வாறு ஒரு புறத்தில் எம் ஜி ஆர் இல்லாத கர்ப்பக்கிரகத்துள் ஜெயலலிதாவைத் தொழுதிருந்த தொண்டர்கள் தயாராக இருக்க. மறு புறத்தில் பத்திரிகைக்காரர் இடைஞ்சலாயிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் முழு இந்திய அளவிலும் வெளிவரும் அனேகமான பத்திரிகைகள் அவரை எரிச்சலோடு பார்க்கின்றன. அவர் சகிப்புத்தன்மை குறைந்தவர் என்று அவை கூறுகின்றன. இந்த விசயத்தில தமிழ் நாட்டிலுள்ள மநிலப் பத்திரிகைகளின் விமர்சனங்களைக் கட்சிஅரசியல்என்று சொல்லக்கூடும் என்றாலும். முழு இந்தியாவிலும் இந்தியாவுக்கு வெளியிலும் ஆங்கில வாசகர்களால் மதிக்கப்படும் இலஸ்ரேற்றற் வீகலி போன்ற சஞ்சிகைகளும் அவ்வாறு விமர்சிப்பதை எவ்வாறு எடுத்துக் கொள்வது?

பிரச்சினை இதுதான். அவருடைய பலம் எதுவோ அதுதான் அவரது பலவீனமாகவும் உள்ளது. அவரது இளமைக் கால திரையுலகு வாழ்வு அவரது நிரந்தரமான பலமாக உள்ளது. எம்.ஜி. ஆரின் இணையாக நடித்தாலும், எம் ஜி ஆரினால் அரசியலில



திணிக்கப்பட்டவர் என்பதாலும் எம் ஜி ஆர் இல்லாத இடத்தில் 'புரட்சித்தலைவி'யாக வீற்றிருக்க அவரால்முடிகிறது எனவே எம் ஜி ஆரைப் போலவே, வறிய, படிப்பறிவற்ற, அப்பாவியான, தமிழ் நாட்டுப் பிரசையின் கனவுகளை ஊடுருவிச்சென்று ஆட்சி செய்ய அவராலும் முடிகிறது இது அவரது பலம். ஆனால் தமிழ்நாட்டிலும் முழு இந்திய அளவிலும் உள்ள படித்த, சிந்திக்கிற இந்தியர்களைப் பொறுத்தவரை அவரது திரையுலக வாழ்க்கை அரசியல் முக்கியத்துவமற்றதாகவே உள்ளது (இது விசயத்தில் சாதாரண இந்தியப் பெண்கள் குறித்து இந்தியர்கள் வைத்திருக்கும் இறுக்கமற்ற வரையறைகளின் செல்வாக்கு ஜெயலலிதா குறித்த அவர்களது அபிப்பிராயங்களைத் தீர்மானிக்கக் கூடும்) குறிப்பாகத் தமிழ் நாட்டில் கல்லூரிகள் மட்டத்திலும்,

[6 ஆம் பக்கம் பார்க்க]

# கலாகேசரி தம்பித்துரையுடன் ஒரு சந்திப்பு

தேர் செதுக்குவதில் உங்களுக்குள்ள திறமையை உங்களுடைய பிற்புலத்தில் எது உங்களுக்குத் தந்தது?

★ இது எங்களது குலத் தொழில், எனது தகப்பனார் செய்யும் சிற்ப வேலைகளைச் சிறு வயதில் நான் அவதானித்துக் கொண்டிருப்பேன். இந்தக் கலையைச் சொல்லித் தெரிந்து கொள்ள முடியாது. பார்த்துப் பார்த்துப் பழக வேண்டும். சிறு வயதில் நான் 4-ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது (1941 இல்) வீரமாளியம்மன் தேர் வேலையை எனது தகப்பனார் ஆரம்பித்தார். பள்ளிக்கூடம் முடிந்ததும் எடுபிடி வேலைகள் போல் ஏதாவது உதவிகள் செய்வேன் நாளடைவில் வர்ணம் பூசுதல், மக்குவைத்தல் போன்ற வேலைகளை எனது தகப்பனார் மேற்பார்வையில் செய்வேன். 1946-இல் புத்தூர் சிவன் கோவில் தேர் வேலை ஆரம்பித்ததும் அதில் ஓரளவு எனது கையும் பட்டது. நல்லூர் கந்தசுவாமி கோவில் கைலாயவாகனம் செய்து கொண்டிருக்கும் போதே எனது தகப்பனரின் கீழ் சம்பளம் பெறும் தொழிலாளியாகி விட்டேன் குலத் தொழிலோடு ஏதாவது மாதா மாதம் நிரந்தர வருமானம் பெறும் தொழில் பார்க்க வேண்டும் என்ற உந்தலினால் சித்திர ஆசிரியர் வேலையில் சேர்ந்து கொண்டேன் 1952-1955 காலப்பகுதியில் கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோவில் தேர், உருபராய் கற்பகப் பிள்ளையார் கோவில் தேர் -இவற்றின் சிற்பப் பகுதிகளை நானே செய்து முடித்தேன். 1962-இல் இலங்கை நுண்கலைக் கல்லூரி நடத்திய சிறப்பு-ஓவிய டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்தேன, எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவில், சுற்றுப் பிரயாணம செய்து 'கண்டறியாதன கண்டேன்.'

கலாகேசரி ஆ. தம்பித்துரையின் சுயமான முத்திரையையும் மேதாவிலாசத்தையும் அவர் அமைத்த சித்திரத் தேர்கள் வெளிப்படுத்துவது போல் வேறெதுவும் வெளிப்படுத்துவதில்லை. அவரது கலையம்சத்தைப் புரிந்து கொள்ளவல்லன அவர் ஆக்கிய தேர்கள் தான் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் (சித்திரம்) கடமையாற்றி இளைப்பாறிய கலாகேசரி, ஓவியக்கலை, சிறுவர் சித்திரம், பண்பாட்டின் மூன்று கோலங்கள், யாழ்ப்பாணத்துப் பிறகாலச் சுவரோவியங்கள், தையல் வேலைச்சித்திரங்கள், கலாயோகி ஆனந்த கே.குமாரசுவாமி ஆகிய நூல்களில் ஆசிரியர். கலாகேசரி தம்பித்துரையின் தந்தை புகழ்பெற்ற சிற்பாசாரியார் வி.ஆறுமுகம் என்பது குறிப்பிடத்தக்கது.



தேர்களிலும், வாகனங்களிலும் ஏதாவது புதுமை செய்திருக்கிறீர்களா?

★ தேரை உருவாக்கும் ஸ்தபதிக்குப் பல திறமைகள் அடிப்படையாக அமையவேண்டும், சுருதி, யுக்தி, ஞானம் என்ற மூன்றையும் சரிவரக் கற்றுக்கொண்டதால்தான் ஒரு முழுமையான கலைப் படைப்பை உருவாக்க முடியும். 1970-க்கு முன்பு இங்கு செய்யப்பட்டு வந்த தேர்களெல்லாம் திராவிட மரபினிலேயே (எண்கோணம்) அமைக்கப்பட்டன. இந்த மரபைத் தவிர, வேஸரம் (வட்டம்) நாகரம் (சதுரம்). அந்திரம் (அறுகோணம்) ஆகியஅமைப்பு முறைகளும் உள்ளன. இந்த அமைப்பு முறைகளை இங்கே அறிமுகப்படுத்தவேண்டும் என்ற அவாவினாலே வேஸர மரபில் (ஆந்திராவில் வழங்கிலுள்ள மரபு) குப்பிளான் சாக்கரை விநாயகர் கோவிலுக்கு ஓர் சித்திரத் தேரை அமைத்தேன், தொடர்ந்து இதே மரபில் புற்றளை சித்தி விநாயகர் கோவிலுக்கும் ஒரு தேரை உருவாக்கினேன். ஆந்திர மரபில் முப்பத்திர சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய முதலாவது தேர் கொக்குவில் (புதுக் கோவில்) சிவசுப்பிரமணிய சுவாமி தேராகும். இவற்றை விட மாத்தளை முத்துமாரி அம்மன் கோவில் தேர் சிறுசக்கர அமைப்பில் சிற்ப வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டது. இது கலவரங்களினால் தீக்கிரையாகிவிட்டது.

சிற்பாசாரியார். தொழிலை விருத்தி செய்ய நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன? தமிழ் நாடுக்கும் போய் பயிற்சி பெற்றீர்களா என்று கேட்டபோது —

★ நாங்கள் வாகனம், தேர், மஞ்சம் முதலியவற்றைச் செய்பவர்கள். கலைக்குடும்பம் அப்படிப்பட்டவர்களுக்கு வறுமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

"கலாகேசரிக்குப் பாடசாலையில எழுத்தும் படிப்பும் வீட்டிலோ உளியும் பொல்லும் மக்கும் வர்ணங்களுமாக இருந்தன" கவின் கலைக்கு ஓர் கலாகேசரி என்ற நூலில் இரசிகமணி கனக. செந்திநாதன்.

பேட்டி கண்டவர்
மதன்

# அரபுக்களிடம் அணு ஆயுதம்; தாக்குதல் நடத்துவோம்

## இஸ்ரேல் எச்சரிக்கை

(டெல்அவிவ்)

மத்திய கிழக்கிற்கு அணுவாயுதங்களை அறிமுகம் செய்யும் எந்தவொரு நாட்டின் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்துமென இஸ்ரேல் விமானப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹெர்ஸில் பொடின் கா தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தினத்தையொட்டி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பிராந்தியத்தில் அணுசக்தி தொழில் நுட்பம் விருத்தியடைவதை நிறுத்த அமெரிக்கா போதிய நடவடிக்கைகளை எடுக்காதிருக்கிறதெனவும் அவர் கண்டித்தார்.

இப்பிராந்தியத்திலுள்ள எந்தவொரு நாடும் அணுசக்தியை பயன்படுத்தத் தனிப்பது தெரியவந்தால் அந்த நாட்டின் மீது எமது கவனம் திருப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈராக்கிலுள்ள ஒஸிராக் தொழிற்சாலை மீது 1981 ஆம் ஆண்டு நடத்திய சர்ச்சைக்குரிய குண்டுத் தாக்குதல் போன்று இனியும் நடத்தப்படுமா என அவரிடம் கேட்கப்பட்டபோது பதிலளித்த இஸ்ரேல்விமானப்படைத் தளபதி:

அரசியல் தாக்கங்கள் பலன் கொடுக்கத் தவறினால் ஒஸிராக் சம்பவம் போன்ற தாக்குதல்கட்டாயம் இடம் பெறும் எனவும்,

ஈரான், சிரியா, லிபியா ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்றும் தெரிவித்தார்.

# இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறதாம்

(இஸ்லாமாபாத்)

கராச்சியில் இந்திய ராஜீயப் பிரதிநிதி ஒருவர் செவ்வாய்க்கிழமையன்று தாக்கப்பட்டது பற்றி இந்திய அரசு உன்னிப்பாக பரிசீலித்து வருவதாக இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் எஸ். கே. லம்பா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிடம் வலுவான எதிர்ப்பை தான் தெரிவித்துள்ள போதிலும் இந்தியாவிலுள்ள பாகிஸ்தானிய தூதுவரிடம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய ராஜீய பிரதிநிதி தாக்கப்பட்ட செயலுக்கு இரண்டு வகை விளக்கங்களையும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தானிலுள்ள சில சக்திகள் தாங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை புலப்படுத்தும் வகையில் இந்தத் தாக்குதலைகளை நடத்தியிருக்கலாம் அல்லது பாகிஸ்தானிய அரசு நமது தலைவர்களிடம் ஒருமாதிரி பேசி விட்டு இன்னொருமாதிரி செயல்படும் இரட்டைவேடம் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

இதே நேரம் பாகிஸ்தான் அரசு இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு

டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

தாக்குதல் ஆரம்பமானதும் நகரை அண்டிய மக்கள் உடைமைகளை தூக்கியவாறு பாதுகாப்பு வலயத்திலுள்ள மாடிக் கட்டங்களின்கீழ் பதுகாப்புக்களைத்தேடிக் கொண்டனர். இதனால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை காலை பத்து மணியளவில் இவர்கள் தமது வீடுகளுக்குத்திரும்பினர்.

இப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளின் பல சிதறல்கள் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள யாழ். போதனா வைத்திய சாலையின் உட்புறங்களிலும் பிரதான வீதிகளிலும் கிடக்கக்காணப்பட்டன ஆனால் இவற்றில் எவரும் காயமடையவில்லை. இவ் எறிகணைத் துண்டுகள் பொது மக்களால் எடுக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளிடம் ஒபபடைக்கப்பட்டன

ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

EAGLE HAS LANDED
(கழுகு தரையிறங்கி விட்டது)

[4569]

# ஏராளமான கண்ணி வெடியாம்

சேந்தாங்குளத்தில் ஏராளமான கண்ணிவெடிகள் காணப்படுகின்றன. அவற்றை அகற்றும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று சிறிலங்கா கூட்டுப் படைகளின் பேச்சாளரான சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சரத் முனசிங்க இதனைத் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சிக் குழு 27-ல் மட்டு.விஜயம

மட்டக்களப்பு மாவட்ட அகதிகளின் அடிப்படை தேவைகளை ஆராய எதிர்க்கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இந்தமாதம் 27 ஆம திகதி மட்டக்களப் பிற்கு செல்லவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

இந்தக் குழுவினர் அகதி முகாம்களுக்கு செல்வதுடன் மட்டக்களப்பு செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறும் மாநாட்டிலும் கலந்துகொள்வர்

## வீரச்சாவு

விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் சந்தியா (யோகேஸ்வரி தேசிங்கம், லட்சுமி இல்லம், கரணவாய் தெற்கு, கரவெட்டி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## குடாநாட்டின்

சாலையிலும் ஏனையோர் அண்மையிலுள்ள தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாதகல் பகுதியில் வீழ்ந்து வெடித்த மூன்று எறிகணைகளினால் அக்கினோ நேசமலர் (வயது 44), சொக்கலிங்கம் வீரவாகு (வயது 55) ஆகிய இருவரும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் நந்தகுமார் ஞானகுமார (வயது 23) இவரது மகன் முகுந்தகுமார் (வயது 04) ஆகியோர் சிறு காயங்களுக்குள்ளாகி பண்டத்தரிப்பு தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கபபட்டுள்ளனர்.

சுழிபுரம் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் ஜெயரஞ்சினி (வயது 19), கந்தையா சங்கரபபிள்ளை (வயது 78) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய எறிகணைகள் அராலி தெற்கு, ஓட்டுமடம், ஐயனார் வீதி, உடையார் ஒழுங்கை, சிவப்பிரகாசம்வீதி, அளவெட்டி வடக்கு, பொன்னாலை பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததினால் இப்பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்தன. [ச],[க],[பா]

ஜெயலலிதா

# புலிகளை எதிர்ப்பது அரசியல் லாபம் கருதியே

(கொழும்பு)

தமிழ்நாடு செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகளை எதிர்ப்பது அரசியல் லாபம் கருதியே ஒழிய எமது நன்மைக்காக அல்ல என சிறிலங்கா பாராளுமன்ற பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; எம் ஜி ஆர்., கருணாநிதி ஆகியோர் புலிகளை ஆதரித்தார்கள். இன்று ஜெயலலிதா எதிர்க்கிறார். எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளவேண்டும்.

பாராளுமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் நேர்மையான முறையில் பிரச்சினைகளை எடுத்துக் கூறவேண்டும் வடக்கு - கிழக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

## க.பொ.த (சா)

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை வர்த்தமானி இங்குவந்து சேராததால் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# நாளை வெளிவரும்

1992 டிசம்பர் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதுதொடர்பான முக்கிய விபரங்களான பாட எண், நகரஎண், மாவட்ட இலக்கம் போன்ற விபரங்கள் விண்ணப்பதாரிகளின் நன்மை கருதி நாளைய ஈழநாதத்தில் வெளிவரும் என்பதை விண்ணப்பதாரிகளுக்கு அறியத் தருகின்றோம.

# விண்ணப்ப முடிவு திகதி யூன் 30

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தின் அதிகாரிகள் பதவிக்கான விண்ணப்பங்களை யூன் 30 ஆம் திகதிவரை அனுப்பமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே 2 ஆம் திகதி விண்ணப்பங்களை வர்த்தமானி மூலம் கோரப்பட்டன.

யூன் 19 ஆம திகதியே விண்ணப்பம்செய்வதற்கான இறுதி தினமாகவும் இருந்தது. பின்னர் இது யூன் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## பதுக்குவோர்

தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வர்த்தகர்களுக்கும் பொது மக்களுக்குமாக விடுக்கப்பட்ட இச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொள்ளை இலாபம் ஈட்டும் நோக்குடன் பரப்பப்படும் வதந்திகளை நம்பி அனாவசியமாக பொருள்களை கொள்வனவு செய்ய முயல்வதன் மூலம் கொள்ளைலாபமீட்ட முயலும் வர்த்தகர்களுக்கு துணைபோவதுடன், கள்ளச்சந்தைகள் உருவாதவதற்கும் ஊக்கம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று பொதுமக்களுக்கு வேண்டுகோளவிடுக்கப்பட்டிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### முருகேசு செல்லமமா

காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு செல்லம்மா காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற இராமலிங்கம் முருகேசுவின் அன்பு மனைவியும், கனகநாயகம் [முன்னாள் கிராமசேவையாளர் காங்கேசன் துறை மத்தி, அமெரிக்கா). அருமைநாயகம் (கிராம சேவையாளர் காங்கேசன்துறை தெற்கு பளை, வீமன்காமம் வடக்கு), சிவஞானம் சத்தியபாமா ஆகியோரின் அன்புத்தாயாரும். கனகநாயகம் சரோஜினிதேவி, (அமெரிக்கா), முத்தையா சிவஞானம் (மாவட்ட நீதிமன்றம் மன்னாகம்), அருமைநாயகம் இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிருந்தன், பிரியந்தன் (அமெரிக்கா). விஜிதா, சுஜிந்தர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சுதுமலை மத்தியில் நடைபெற்று தாவடி மயானத்திற்கு இன்று (19-06-92) பிற்பகல் 3மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லபபடும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
முருகேசு அருமைநாயகம்
[மகன]

(2698)

## வாகன வரிசை இலக்கம் 18-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4435

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3650

இராணுவம் அனுமதித்த இறுதி வாகன வரிசை இலக்கம்:-3615

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-
42-2432, 40-7584 24-7537. 40-2394 42-1019, 26-2827, 41-6544. 26-7393, 27-4628, 24-5734 24-5454, 42-2157, 41-9175 42-2364, 22-7003, 24-2285, 28-1414 28-8177, 26-1169, 73-1953.

வட பகுதிக்கு உள்ளே செல்ல அனுமதித்த வாகன இல:-
24-4265, 28 9037, 26-3962 26-2840, 28-9449 28-1984, 41-9579 24-5323 24-6972 41-8449 27-8754 26-4885 27 4019 28-1754, 26-7663, 28-3233, 42-9625, 27-6524,

## அலுவலர் கவனத்திற்கு

அலுவலரின் வசதி கருதி இன்று 19-ம் திகதி ஜூன் மாதத்திலிருந்து வதிரியில் அலுவலர்களிற்கான அனுமதி வழங்கும் புதிய அலுவலகம் ஒன்றுஇயங்கவுள்ளது 19-ம் திகதியில் இருந்து அலுவலர்கள் தமக்கான அனுமதிகளை இவ்வலுவலகததிலும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் வடபகுதிக்குள் நுழைவோர் தமது நுழைவோர் அட்டைகளை இவ் அலுவலகத்தில் புதுப்பித்துக்,கொள்ள முடியும் என்பதனை அறியத்தருகின்றோம்

போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்,

(2694)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடபபட்டது

# பல முனைகளில் ஒரே நேரத்தில் சண்டை; இராணுவத்தின் புதிய யுத்த தந்திரோபாயம்

கடந்த மூன்று மாதங்களாகச் சற்றுத் தணிந்திருந்த சண்டை கடந்த 28ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகியது. ஒரே நேரத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பலாலியைச் சூழவுள்ள பகுதியில் சண்ட மாருதம் என்ற பெயரிலும் முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து மணலாறு நோக்கி 'ஏழு சக்திகள்' என்ற பெயலும் இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் ஆரம்பித்தது. பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் விமானப் படை, கடற்படையின் உதவியுடனும் இத்தாக்குதல்கள் ஆரம்பமாகின.

இத்தாக்குதல்களின் இலக்குகள் குறித்து சிறிலங்கா இராணுவத்தரப்பு தெளிவாக எதையும் கூறாவிட்டாலும் பலாலியில் இடம்பெற்ற தாக்குதலை முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கை எனவும், முல்லைத்தீவில் இடம்பெற்ற தாக்குதலை மணலாற்றிற்கான புலிகளின் கடல்வழி விநியோகப் பாதையை துண்டிப்பதற்கான நடவடிக்கை எனவும் கூறியது. ஆனால், இராணுவ நடவடிக்கை தற்பொழுது இடைநிறுத்தப் பட்டிருப்பினும் (நேற்று நண்பகல் வரை) எந்த நேரத்திலும் இராணுவ நடவடிக்கைகள் தொடங்குவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. இதனை சிறிலங்கா இராணுவத் தரப்பினர் மறுக்கவில்லை இந் நிலையில் இராணுவத்தின் இலக்கு பற்றிக் குறிப்பிடாமை இராணுவ தந்திரோபாயத்தின் ஒரு பகுதி என்றே கொள்ளலாம்.

## இராணுவச் சீரமைப்பு

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் இருந்து யாழ்ப்பாணம் மீதான படை எடுப்பு பற்றிப் பேசப்பட்டதாயினும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை மேற்கொள்ள முடியாமல் செய்தது. இதனைத் தொடர்ந்து இராணுவ கட்டளையிடும், கட்டுப்படுத்தும் அமைப்புக்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இவ் அமைப்பு மாற்றத்தின் பிரகாரம் கட்டுப்படுத்தலும் கட்டளை இடும் அதிகாரங்கள் கூட்டுப்படைத் தலைமையகத்திலிருந்து முப்படைத் தளபதிகளாலும், பொலிஸ்மா அதிபரிடமும் சென்றது. இவ் அதிகார மாற்றத்தினால், இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில்சில கருத்துவேற்றுமைகளும் எழுந்தன.

இராணுவ அமைப்பில் கட்டளையிடும் கட்டுப்படுத்தும், நிலையில் ஏற்பட்ட அதிகார மாற்றத்தைத் தொடர்ந்து, கடந்த மூன்றுமாத காலமும் இராணுவ அமைப்பு புனரமைக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான அதிரடித் தாக்குதலினால் மனோதிடம் பலவீனப் பட்டிருந்த இராணுவத்தினருக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டன, இதேவேளை புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டது,

அத்தோடு இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில் இருந்த கருத்து மோதல்களைக் களையும் பொருட்டு அதற்கு ஏனவிதத்தில் பதவி உயர்வும், காலநீடிப்பும் வழங்கப் பட்டது. லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னாவின் பதவி உயர்வும், கூட்டுப் படைத் தலைமையகத்திடம் இருந்த அதிகாரக் கைமாற்றம் போன்றவையும் உயர் அதிகாரிகள் மட்டத்தில் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியிருந்தது இந்நிலையில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ போன்றவர்களை திருப்திப்படுத்தக் கூடியதாக அமைந்துள்ள சேவைக் கால நீடிப்பும் பதவி உயர்வும் உயர்மட்ட அதிகாரிகள் மட்டத்தில் ஏற்பட்ட மனக் கசப்பை ஓரளவு போக்குவதாகவும் அமைந்தது.

> இராணுவத்தில் கட்டளையிடும், கட்டுப்படுத்தும் அதிகார அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துடன் கடந்தமூன்று மாத காலப்பகுதியில்இராணுவம்சீரமைக் கப்பட்டுள்ளது. போருக்கான புதிய தந்திரோபாயம் வகுக்கப்பட்டுள்ளதுடன், இராணுவத்தினருக்கு மீள்பயிற்சியும, உயர் அதிகாரிகள் மட்டத்தில் இருந்த முரண்பாடுகளை போக்கும் விதத்தில் பதவி உயர்வுகளும், சேவைக்கால நீடிப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

## புதிய யுத்த தந்திரோபாயம்

அமைப்பு ரீதியான மாற்றத்துடன் யுத்தத்தில் புதிய தந்திரோபாயமும் வகுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியுமாகிலும், தொடர்ந்து அதை வைத்துப் பேண முடியுமா என்பது குறித்து இராணுவத் தரப்பினர் மத்தியில் பலமான கருத்து வேறுபாடுகள் இருப்பினும் இராணுவ வெற்றி என்பது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல் என்பதில்தான் தங்கியுள்ளது எனத் தெளிவாக முன்வைக்கப்பட்டது.

ஆனால், புதிய யுத்த தந்திரோபாயத்தில் இராணுவத்தினருக்கான புவியியல் சாதக நிலை, புலிகளின் யுத்திகள் என்பனவையும் பெரியளவில் கருத்திற் கொள்ளப்பட்டே வகுக்கப்பட்டது. பழைய யுத்த தந்திரோபாயத்தின்படி யாழ்ப்பாணத்தின் மீது பாரிய படை எடுப்பை ஒரே நேரத்தில் நடத்துவது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. புதிய தந்திரோபாயத்தின்படி அது நிராகரிக்கப்பட்டுத் தொடர்ச்சியான பல முனைப் போரை மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் நடத்தத் திட்டமிடப்பட்டது.

மேலும் புதிய தந்திரோபாயத்தில் பல முனைகளில் புலிகளைப் போருக்கு இழுத்து புலிகளுக்கு பெரும் ஆட்சேதத்தை ஏற்படுத்துவதும் பிரதான நோக்கமாகும். இது குறித்து சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் வெளிப்படையாகவே விமர்சித்தன. இராணுவப் பேச்சாளரான கேர்ணல் முனசிங்கா எவ்வளவு புலிகளைக் கொல்லமுடியுமோ அவ்வளவு புலிகளைக் கொல்வதே புதிய இராணுவ நடவடிக்கைகளின் நோக்கம் எனத் தெரிவித்தார்.

புதிய போர் தந்திரோபாயத்தில் இராணுவத்தினருக்குப் பெரியளவில் உயிரிழப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்த்தலும் முக்கியமான தொன்றாகும். கடந்த வருட இறுதியில் இருந்து புலிகள் மேற்கொண்ட தொடர்ச்சியான எதிர்த் தாக்குதல்களினால் மனோதிடம் இழந்திருந்த இராணுவத்தினருக்கு தொடர்ந்தும் பாரிய இழப்புக்கள் ஏற்படுமானால் தொடர்ந்தும் போரை நடத்த முடியாத நிலை உருவாகும் என்பதினால் இராணுவத்தினரின் உயிரிழப்புகளைத் தவிர்ப்பது முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட்டது.

இந்நிலையில்தான் தாக்குதல் பிரதேசங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அத்தோடு விமானப் படையினதும், கடற்படையினதும் உதவியின் அளவும் தீர்மானிக்கப்பட்டது. அதாவது விமானப்படை, கடற்படையின் பூரண ஒத்துழைப்புடன் முன்னேறக் கூடிய பகுதிகள் தாக்குதலுக்கென முதலில் தெரிவு செய்யப்பட்டன.

## சண்ட மாருதம்

இப்புதிய தந்திரோபாயத்தின் அடிப்படையில் தான், 'சண்ட மாருதம்' 'ஏழு சக்தி' இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகின. கடந்த மாதம் 28 ஆம் திகதி பலாலி இராணுவ முகாமின் கிழக்குப்பகுதியில் இருந்துவிமானபடையின் உதவியுடன் டாங்கிகள் சகிதம் வெளிகள் ஊடாக இராணுவம்முன்னேறியது. ஆனால் இராணுவத்தினர் தொண்டமனாறு பாலத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்ட போது புலிகளின் எதிர்தாக்குதலினால், இராணுவத்தினருக்கு குறிப்பிடத்தக்க உயிர்ச் சேதம் ஏற்பட்டது இதனைத் தொடர்ந்து இராணுவம் அப்பகுதியில் இருந்து உடன் பின்வாங்கியது.

பின்னர் 31- ஆம் திகதி பலாலி இராணுவ முகாமின் கிழக்குப் பக்கமாக பாரிய குண்டுத்தாக்குதலுடன் இராணுவம் தாக்குதலைத் தொடங்கியது மிகப் பெருமெடுப்பில் மேற் கொள்ளப்பட்ட இந் இராணுவ நடவடிக்கையின் போது தெல்லிப்பளை சந்திவரை இராணுவம் முன்னேறியது. இத்தாக்குதலின்போது மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலும் எறிகணைத் தாக்குதலும் பாரிய சேதங்களை ஏற்படுத்தியது தாக்குதல்கள் பரவலாக இடம் பெற்றன.

ஆனால் இத்தாக்குதலும் இடையில் நிறுத்தப் பட்டது இத்தாக்குதலில் முக்கிய அதிகாரியப்பணியாற்றிய உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டமையும் (இறக்கும்போது லெப் கேணலாக இருந்த இவ் அதிகாரி பின்னர் கேணலாகப் பதவி உயர்வுபெற்றார்) சீன தயாரிப்பு டாங்கி தகர்க்கப்பட்டதும் காரணமாயின. ஆனால் இராணுவம் தாம் கைப்பற்றிய இடங்களைப்பலப்படுத்துவதாகக் கூறிக்கொண்டது ஆனால், மேற்கு நோக்கி முன்னேறும் எண்ணம் இராணுவத்திற்கு உள்ளதாக கேணல் முனசிங்கா பத்திரிகையாளரிடம் தெரிவித்தார் ஆனால், அடுத்த கட்ட நடவடிக்கை ஒருவாரத்தின் பின்னரே ஆரம்பிக்கப் பட்டது.

அடுத்த கட்ட நடவடிக்கை இம் மாதம் 11- ஆம் திகதி நடைபெற்றது. மாவிட்டபுரம் தச்சன்காடு கொல்லங்கலட்டி கீரிமலைப்பகுதிகளில் இருந்து தெற்கு நோக்கி முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டது. இதன் மூலம் தெல்லிப்பழைச் சந்திக்கும், அம்பனைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதிகளை கைப்பற்றத் திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால் இம்முயற்சியின் ஆரம்பத்தின் போதே விடுதலைப் புலிகள் நடத்திய பலமான எதிர்தாக்குதலினால் இராணுவத்திற்கு பெரும் உயிரிழப்பு ஏற்பட்டது பெரும் எடுப்பிலான விமானத் தாக்குதலுடன் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் போதும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட எதிர்பாராத இழப்பானது தாக்குதல்திசையையே மாற்றிசேந்தான்குளம்நோக்கி திருப்பியது அதாவது தெற்கு நோக்கி முன்னேற முயன்ற இராணுவம் எதிர்பாரத இழப்பால் வடமேற்குநோக்கிதிரும்பியது. சேந்தான்குளப்பகுதி முன்னேற கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட யுத்த சூனியப் பிரதேசமாக இருந்ததனாலும் கரையோரமாகவும் வெளியான பகுதியாகவும் இருந்ததினாலும், இராணுவத்தின் முன்னேற்றம் சாதகமாகியது.

> ஒரே நேரத்தில்பல முனைகளில்போரை நடத்துவதன் மூலம் புலிகள் ஒன்று திரண்டு தாக்குவதைத் தவிர்க்கும் அதே வேளை, புலிகளுக்கு பெரும் உயிரிழப்பை ஏற்படுத்திப் பலவீனப் படுத்துவது புதிய யுத்த தந்திரோபாயத்தின் முக்கிய குறிக் கோளாகும்.

## ஏழு சக்தி

இதேவேளை இரண்டாவது இராணுவ நடவடிக்கை முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து கரையோரமாக தெற்காக அளம்பில் நோக்கி நடத்தப்பட்டது கரையோரத்தின் ஊடாகவும், வெளியினூடாகவும், கடற்படையினரதும், விமானப்படையினரினதும் உதவியுடன் இத்தாக்குதல் நடத்தப்பட்டது இந் நடவடிக்கையின் போது புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர் எனினும் விமானப்படையின் உதவியும், கடற்படையின் உதவியும் இராணுவத்திற்கு சாதகமானதாக இருந்தது

ஆனால், அளம்பிலில் இருந்து மேற்குப்பக்கமாகத் திருப்பி காட்டுவழி ஊடாக குமுழமுனை நோக்கி இராணுவம் முன்னேற முற்பட்ட போது இராணுவம் கடும் எதிர்ப்பையும் இழப்புக்களையும் சந்திக்கத் தொடங்கியது. இந்நிலையில் குமுழமுனை நோக்கி முன்னேறும் திட்டத்தை கைவிட்டு இராணுவம் பின்வாங்கியது.

அதாவது இரண்டு தாக்குதல் நடவடிக்கைகளின் போதும் இராணுவம் தமக்குச் சாதகமான புவியியல் அமைப்புக்களைத் தெரிவு செய்து சண்டைகளை ஆரம்பித்தன. இவ்விரு சண்டைகளின்போது, பெரும் அளவினதானவெடிப் பொருள்கள் விமானப்படையினர் பாவித்து புலிகளின் நிலைகளையும், மக்களின் குடியிருப்புக்களையும் தாக்கின. அதாவது, புலிகளுடன் நேரடியாக மோதிக் கொள்வதை தவிர்க்கும் பொருட்டு, பெரும் அளவில் கடற்படை, விமானப்படை பயன்படுத்தப் பட்டது. அதேவேளை பெரிய அளவில் இராணுவத்தினருக்கு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டவுடன், அல்லது செயற்படும் என்ற நிலையில் சண்டையின் திசை மாற்றினர் அல்லது சண்டையை நிறுத்தினர்.

மேற்கூறப்பட்ட இரு தாக்குதல்களின் தந்திரோபாயத்தின் அடிப்படையிலே தற்பொழுதும் வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியிலும் பெருமளவில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியிலும் ஒரு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமானால், அது குடாநாட்டிற்கும் பிரதான நிலப்பரப்பிற்கும் இடையில் இடம் பெறும் போக்குவரத்துப் பாதையைத் துண்டிப்பதற்கான நோக்கமாகக் கொண்டிருப்பினுமிது அல்லது அவ் வாறு இல்லாதுவிடினும் பெருவெளியில் ஒரு சண்டையை இராணுவம் நடத்த விரும்புவதையே காட்டி நிற்கின்றது.

அத்தோடு, பல முனைகளில் ஒரே நேரத்தில் தாக்குதலை நடத்துவதன் மூலம் புலிகள் ஒன்று சேர்ந்து தாக்குதலை நடத்துவதை தவிர்க்கலாம் எனவும் புலிகள் பல முனைகளில் போரிடுவதன் மூலம் அவர்களை இலகுவில் தோற்கடிக்கமுடியும் எனவும் இராணுவம் கருதுகின்றது.

அதாவதுயாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கான இறுதித் தாக்குதலுக்கு முன்னர், புலிகளை பலவீனப்படுத்தவும், புலிகள் புதிய தாக்குதல் எதையும் நடத்த கால அவகாசம் கொடுக்காமையும், கடந்த சில மாதங்களாக புலிகளின் தொடர்ச்சியான அதிரடித்தாக்குதலினால், தமது மனோதிடத்தை இழந்து போயுள்ள இராணுவத்திற்கு மனோபலத்தை ஏற்படுத்துவதுமே இராணுவத் தலைமையின் புதிய யுத்த தந்திரோபாயத்தின் மூல யுத்தியாகும்.

**- ஜெயராஜ்**

---

## மீன் சந்தையில் 20,000 ரூபா பறிப்பு

(கொழும்பு)

இனந்தெரியாத நபர் ஒருவர் புறக்கோட்டை மீன் சந்தைக்கு அருகில் வைத்து வடபகுதி யுவதி ஒருவரிடமிருந்து இருபதினாயிரம் ரூபாவினை பறித்துச் சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் காலை மீன்சந்தைக்குச் சென்ற பெண்ணிடமே இந்தப்பணம் கொள்ளையிடப்பட்டது.

## ஜே. வி. பி. சந்தேகநபர் மூவர் சுட்டுக் கொலை

ஜே. வி. பி. சந்தேக நபர்கள் வைக்கப்பட்டிருக்கும் பல்லேகல தடுப்பு முகாமிலிருந்து தப்பியோட முனைந்ததாகக் கூறப்படும் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை இச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரபுக்களிடம் அணு ஆயுதம்; தாக்குதல் நடத்துவோம்

## இஸ்ரேல் எச்சரிக்கை

(டெல்அவிவ்)

மத்திய கிழக்கிற்கு அணுவாயுதங்களை அறிமுகம் செய்யும் எந்தவொரு நாட்டின் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்துமென இஸ்ரேல் விமானப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹெர்ஸில் பொடின்கர் தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தினத்தை யொட்டி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும் போது வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பிராந்தியத்தில் அணுசக்தி தொழில்நுட்பம்விருத்தியடைவதை நிறுத்த அமெரிக்கா போதிய நடவடிக்கைகளை எடுக்காதிருக்கிறதெனவும் அவர் கண்டித்தார்.

இப்பிராந்தியத்திலுள்ள எந்தவொரு நாடும்அணுசக்தியை பயன்படுத்தஎத்தனிப்பது தெரியவந்தால்அந்த நாட்டின் மீதுஎமதுகவனம்திருப்பபடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈராக்கிலுள்ள ஒஸிராக் தொழிற்சாலை மீது 1981 ஆம் ஆண்டு நடத்திய சர்ச்சைக்குரிய குண்டுத் தாக்குதல் போன்று இனியும் நடத்தப்படுமா என அவரிடம் கேட்கப்பட்டபோது பதிலளித்த இஸ்ரேல்விமானப்படைத் தளபதி:

அரசியல் தாக்கங்கள் பலன் கொடுக்கத் தவறினால் ஒஸிராக் சம்பவம் போன்று தாக்குதல்கட்டாயம் இடம் பெறும் எனவும்,

ஈரான், சிரியா, லிபியா ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்றும் தெரிவித்தார்.

# இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறதாம்

(இஸ்லாமாபாத்)

கராச்சியில் இந்திய ராஜீயப் பிரதிநிதி ஒருவர் செவ்வாய்க்கிழமையன்று தாக்கப்பட்டது பற்றி இந்திய அரசு உன்னிப்பாக பரிசீலித்து வருவதாக இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் எஸ். கே. லம்பா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிடம் வலுவான எதிர்ப்பை தான் தெரிவித்துள்ள போதிலும் இந்தியாவிலுள்ள பாகிஸ்தானிய தூதுவரிடம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய ராஜீய பிரதிநிதி தாக்கப்பட்ட செயலுக்கு இரண்டு வகை விளக்கங்களையும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தானிலுள்ள சில சக்திகள் தாங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை புலப்படுத்தும் வகையில் இந்தத் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் அல்லது பாகிஸ்தானிய அரசு நமது தலைவர்களிடம் ஒருமாதிரி பேசிவிட்டு இன்னொருமாதிரி செயல்படும் இரட்டைவேடம் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

இதே நேரம் பாகிஸ்தான் அரசு இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு

டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

தாக்குதல் ஆரம்பமானதும் நகரை அண்டிய மக்கள் உடைமைகளை தூக்கியவாறு பாதுகாப்பு வலயத்திலுள்ள மாடிக் கட்டங்களின்கீழ் பாதுகாப்புகளைத்தேடிக் கொண்டனர். இதனால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை காலை பத்து மணியளவில் இவர்கள் தமது வீடுகளுக்குத்திரும்பினர்.

இப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளின் பல சிதறல்கள் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் உட்புறங்களிலும் பிரதான வீதிகளிலும் கிடக்கக்காணப்பட்டன ஆனால் இவற்றில் எவரும் காயமடையவில்லை. இவ் எறிகணைத் துண்டுகள் பொது மக்களால் எடுக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன

## ஏராளமான கண்ணி வெடியாம்

சேந்தாங்குளத்தில் ஏராளமான கண்ணிவெடிகள் காணப்படுகின்றன. அவற்றை அகற்றும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று சிறிலங்கா கூட்டுப் படைகளின் பேச்சாளரான சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சரத் முனசிங்க இதனைத் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சிக் குழு 27-ல் மட்டு.விஜயம

மட்டக்களப்பு மாவட்ட அகதிகளின் அடிப்படை தேவைகளை ஆராய எதிர்க்கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இந்தமாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பிற்கு செல்லவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

இந்தக் குழுவினர் அகதி முகாம்களுக்கு செல்வதுடன் மட்டக்களப்பு செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறும் மாநாட்டிலும் கலந்துகொள்வர்

வீரச்சாவு

விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் சந்தியா (யோகேஸ்வரி தேசிங்கம், லட்சுமி இல்லம், கரணவாய் தெற்கு, கரவெட்டி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

குடாநாட்டின்

சாலையிலும் ஏனையோர் அண்மையிலுள்ள தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாதகல் பகுதியில் வீழ்ந்து வெடித்த மூன்று எறிகணைகளினால் அக்கினோ நேசமலர் (வயது 44), சொக்கலிங்கம் வீரவாகு (வயது 55) ஆகிய இருவரும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் நந்தகுமார் ஞானகுமார (வயது 23) இவரது மகன் முகுந்தகுமார் (வயது 04) ஆகியோர் சிறு காயங்களுக்குள்ளாகி பண்டத்தரிப்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுழிபுரம் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் ஜெயரஞ்சினி (வயது 19), கந்தையா சங்கரப்பிள்ளை (வயது 78) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய எறிகணைகள் அராலி தெற்கு, ஒட்டுமடம், ஐயனார் வீதி, உடையார் ஒழுங்கை, சிவப்பிரகாசம்வீதி, அளவெட்டி வடக்கு, பொன்னாலை பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததினால் இப்பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்தன. [ச],[க],[பா]

ஜெயலலிதா

# புலிகளை எதிர்ப்பது அரசியல் லாபம் கருதியே

(கொழும்பு)

தமிழ்நாடு செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகளை எதிர்ப்பது அரசியல் லாபம் கருதியே ஒழிய எமது நன்மைக்காக அல்ல என சிறிலங்கா பாராளுமன்ற பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; எம் ஜி ஆர். , கருணாநிதி ஆகியோர் புலிகளை ஆதரித்தார்கள். இன்று ஜெயலலிதா எதிர்க்கிறார். எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளவேண்டும்.

பாராளுமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் நேர்மையான முறையில் பிரச்சினைகளை எடுத்துக் கூறவேண்டும் வடக்கு - கிழக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

க.பொ.த (சா)

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை வர்த்தமானி இதுவரை சேராததால் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## நாளை வெளிவரும்

1992 டிசம்பர் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான முக்கிய விபரங்களான பாட எண், நகரஎண், மாவட்ட இலக்கம் போன்ற விபரங்கள் விண்ணப்பதாரிகளின் நன்மை கருதி நாளைய ஈழநாதத்தில் வெளிவரும் என்பதை விண்ணப்பதாரிகளுக்கு அறியத் தருகின்றோம்.

## விண்ணப்ப முடிவு திகதி யூன் 30

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தின் அதிகாரிகள் பதவிக்கான விண்ணப்பங்களை யூன் 30 ஆம் திகதிவரை அனுப்ப முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே 2 ஆம் திகதி விண்ணப்பங்களை வர்த்தமானி மூலம் கோரப்பட்டன.

யூன் 19 ஆம் திகதியே விண்ணப்பம்செய்வதற்கான இறுதி தினமாகவும் இருந்தது. பின்னர் இது யூன் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதுக்குவோர்

தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வர்த்தகர்களுக்கும் பொது மக்களுக்குமாக விடுக்கப்பட்ட இச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொள்ளை இலாபம் ஈட்டும் நோக்குடன் பரப்பப்படும் வதந்திகளை நம்பி அனாவசியமாக பொருள்களை கொள்வனவு செய்ய முயல்வதன் மூலம் கொள்ளைலாபமீட்ட முயலும் வர்த்தகர்களுக்கு துணைபோவதுடன், கள்ளச் சந்தைகள் உருவாகுவதற்கும் ஊக்கமளிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று பொதுமக்களுக்கு வேண்டுகோள்விடுக்கப்பட்டிருக்கிறது.


ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

EAGLE HAS LANDED

(கழுகு தரையிறங்கி விட்டது)

[4569]


## அலுவலர் கவனத்திற்கு

அலுவலரின் வசதிகருதி இன்று 19-ம் திகதி ஜூன் மாதத்திலிருந்து வதிரியில் அலுவலர்களிற்கான அனுமதி வழங்கும் புதிய அலுவலகம் ஒன்றுஇயங்கவுள்ளது 19-ம் திகதியில் இருந்து அலுவலர்கள் தமக்கான அனுமதிகளை இவ்வலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். இத்துடன் வடபகுதிக்குள் நுழைவோர் தமது நுழைவோர் அட்டைகளை இவ் அலுவலகத்தில் புதுப்பித்துக் கொள்ள முடியும் என்பதனை அறியத்தருகின்றோம்

போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்,

(2694)

## மரண அறிவித்தல்

### முருகேசு செல்லம்மா

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு செல்லம்மா காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற இராமலிங்கம் முருகேசுவின் அன்பு மனைவியும், கனகநாயகம் [முன்னாள் கிராமசேவையாளர் காங்கேசன்துறை மத்தி, அமெரிக்கா). அருமைநாயகம் (கிராம சேவையாளர் காங்கேசன்துறை தெற்கு பளை, வீமன்காமம் வடக்கு), சிவஞானம் சத்தியபாமா ஆகியோரின் அன்புத்தாயாரும், கனகநாயகம் சரோஜினிதேவி, (அமெரிக்கா), முத்தையா சிவஞானம் (மாவட்ட நீதிமன்றம் மன்னாகம்), அருமைநாயகம் இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிருந்தன், பிரியந்தன் (அமெரிக்கா). ஸ்ரீஜிதர், சுஜிந்தர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சுதுமலை மத்தியில் நடைபெற்று தாவடி மயானத்திற்கு இன்று (19-06-92) பிற்பகல் 3மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
முருகேசு அருமைநாயகம்
[மகன்]

(2698)

## வாகன வரிசை இலக்கம் 18-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4435

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3650

இராணுவம் அனுமதித்த இறுதி வாகன வரிசை இலக்கம்:- 3615

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-

42-2432, 40-7584 24-7537. 40-2394 42-1019, 26-2827, 41-6544. 26-7393, 27-4628, 24-5734 24-5454, 42-2157, 41-9 75 42-2364, 22-7003, 24-2285, 28-1414 28-8177, 26-1169. 73-1953.

வட பகுதிக்கு உள்ளே செல்ல அனுமதித்த வாகன இல:-

24-4265, 28 9037, 26-3962 26-2840, 28-9449 28-1984, 41-9579 24-5323 24-6972 41-8449 27-8754 26-4885 27 4019 28-1754, 26-7663, 28-3233, 42-9625, 27-6524,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது